RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 10 • இதழ் 2 • ஆகஸ்ட் 2025 • விலை ரூ.18/-

# வெண்மை


தமிழ் மாத இதழ்
VENMAI



எண்ணங்கள்

## குரு
சிறப்பிதழ்

**உனக்கும் நல்லதாய்
ஊருக்கும் நல்லதாய்,
நினைப்பதும் செய்வதும்
நித்தியக்கடன்.**
**– அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி**



RAMRAJ
ACHARYA®
PANCHAKACHAM DHOTIS
Shop Online @ www.ramrajcotton.in

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

கற்றுத் தரும் வழிகாட்டிகளைத் தேடிக் கண்டடைந்து
பெற்றுக்கொள்ளும் போதனைகளை மறக்காமல் பின்பற்றி
போற்றுதலுக்குரிய பெருவாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டும்

**குரு** சிறப்பிதழ்

**என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.**



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

‘குரு என்பவர் யார்?’ என்ற கேள்வி, ஒவ்வொருவர் வாழ்விலும் முக்கியமானது. சரியான குருவைக் கண்டடைந்தவர்கள் பொருளற்ற துயரங்களில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். பெரிய பெரிய ஆன்மிகச் சிந்தனைகளை, தத்துவங்களை விளக்குவதுடன் மட்டுமின்றி, நிறைவாக வாழ்வதற்கான எளிய வழிமுறைகளை நமக்குப் புரிய வைப்பவரே உண்மையான குரு.

ஊருக்குள் ஒரு துறவி வந்திருக்கிறார் என்கிற செய்தி எல்லோருக்கும் பரவியது. மக்கள் பலர் சென்று அவரை வணங்கி ஆசிகளைப் பெற்றனர். சரியான குருவைத் தேடி அடைந்து ஞானம் பெறவேண்டும் எனத் தேடிக்கொண்டிருந்த ஒருவர் வந்து இந்தத் துறவியைச் சந்தித்து, தன்னுடைய ஞானத்தேடல் பற்றி விளக்கி வழிகாட்டுமாறு கேட்டுக்கொண்டார். “நான் போதிப்பதைக் கேட்பதைவிட, சில நாள் என்னோடு இருந்து என்னைக் கவனி. உனக்குப் புரிந்துவிடும்” என்று சொன்னார் துறவி.

அன்றுமுதல் அவர் துறவியையே கவனித்துக்கொண்டிருந்தார். துறவியோ பெரும்பாலான நேரம் கண்களை மூடி அமர்ந்திருந்தார். ஆசி கேட்டு வருபவர்கள் கொடுப்பதைக் கொஞ்சமாகச் சாப்பிட்டார், பிறகு தூங்கினார். அடுத்த நாள் அதையே செய்தார். மீண்டும் அடுத்த நாளும் கண்களை மூடி அமர்வது, ஆசி வழங்குவது, கிடைப்பதை உண்பது, உறங்குவது என இருந்த துறவியைப் பார்த்து, ஞானம் தேடியவர் சலிப்படைந்தார்.

“நீங்கள் பொருளை மறைய வைப்பது, காற்றில் விபூதி எடுப்பது போன்ற எந்த அதிசயங்களையும் நிகழ்த்தவில்லை. பசித்தால் சாப்பிடுவது, தூக்கம் வந்தால் தூங்குவது எல்லோரும் செய்வதுதானே?” என்று கேட்டார். துறவி சிரித்தபடி, “என்னைப் போல் சாதாரணமாக உண்டு, உறங்கி, மன அமைதியுடன் ஏன் உன்னால் இருக்க முடியவில்லை?” என்று கேட்டார். பதில் சொல்ல இயலாமல் விழித்தார் அவர்.

“நீ சாப்பிடும்போது, உன் மனம் உண்ணும் அந்தச் செயலில் இருக்காது. நடந்ததையும் நடக்கப் போவதையும் நினைத்துக்கொண்டு சாப்பிடுவாய். உறங்கும்போது உன் மனம் அலைபாய்ந்துகொண்டேதான் இருக்கிறது. நான் தியானம் செய்யும்போது மனமொன்றித் தியானம் செய்கிறேன். சாப்பிடும்போது மனமொன்றி உணவில் லயிக்கிறேன். உறங்கும்போது இறப்பைப் போலச் சலனமின்றி உறங்குகிறேன். எதைச் செய்கிறேனோ நான் அதுவாகி விடுகிறேன். நம் செயல்பாடுகளில் மனம் ஒன்றிவிடும்போது, வாழ்வு சுமையற்றதாகிவிடும்.

குரு என்பவர், வழி காட்டுபவர் மட்டுல்ல. திசை தெரியாமல் திகைத்து நிற்கும்போது, ‘உனது வழியை நீ எப்படிக் கண்டடைய வேண்டும்’ என்பதை உணர்த்துபவர். உனக்குள் இருக்கும் ஞானம் விழிப்படைய வேண்டுமெனில், தியானம் செய். பசி எடுத்தால் சாப்பிடு. தூக்கம் வந்தால் தூங்கு. செய்யும் செயல்களை மனம் ஒன்றிச் செய்” என்று அந்தத் துறவி சொன்னதாகக் கதை முடியும்.

என் வாழ்வில் அப்படி வழிகாட்டிய குரு, அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள். தொழிலை வெற்றிகரமாகச் செய்ய வேண்டும் என என்னை மறந்து ஓடிக்கொண்டிருந்தபோது, ‘இது நிரந்தர வெற்றி அல்ல’ என்பதை என்னை உணர வைத்தார். உடல்நலமும், மனவளமும், குடும்ப அமைதியும், சமுதாய நலனும் ஒருங்கிணைந்த வெற்றியே உண்மையான வெற்றி என்று புரியவைத்தார். இதை நான் உணர்ந்த பிறகு, என் சிந்தனை முறையே மாறியது. ஒவ்வொரு செயலிலும் மனம் ஒன்றிச் செயல்பட முடிந்தது. வாடிக்கையாளர்களின் மனநிறைவு, நெசவாளர்களின் தன்னிறைவு, தொழிலாளர்களின் நலன், உறவுகளின் மதிப்பு, சமுதாயப் பங்களிப்பு என வெற்றியின் அர்த்தம் விரிவடைந்து கொண்டே இருந்தது.

வகுப்பறையில் ஓர் ஆசிரியர் ஒரு யானையின் பாகங்களைத் தனித்தனியாக வரைந்து, அவற்றைக் குழந்தைகளிடம் சுட்டிக்காட்டி அவற்றின் பெயர்களைக் கேட்டு மதிப்பெண் போட்டுக்கொண்டிருந்தார். ஒவ்வொரு பாகத்தைச் சுட்டிக் காட்டி “இது என்ன?” என்று கேட்கும்போது, ‘துதிக்கை’ என்றும், ‘தந்தம்’ என்றும் மாணவர்கள் பதில் தந்தபோது வகுப்பறையில் கைத்தட்டல் எதிரொலித்தது. பாகங்களை வரைந்து முடித்து இணைத்தபோது முழுமையான யானையின் உருவம் வந்தது.

இறுதியாக, “இது என்ன?” என்று அவர் கேட்டபோது, ‘யானை’ என்று எல்லாக் குழந்தைகளும் ஒருமித்த குரலில் கத்தினர். ஒரு குழந்தை மட்டும் பதில் சொல்லாமல் அமைதியாக இருப்பதை ஆசிரியர் கவனித்தார். “உனக்கு இது என்னவென்று தெரியவில்லையா? இதுதான்



யானை'' என்று அந்தக் குழந்தைக்குச் சொன்னார். குழந்தை 'இல்லை' என்று வேகமாகத் தலையசைத்தது. ''நான் யானையைப் பார்த்திருக்கிறேன். அதன்மேல் அமர்ந்து சவாரி செய்திருக்கிறேன். எனக்கு யானை எதுவென்று நன்றாகத் தெரியும்'' என்று குழந்தை உறுதியாகச் சொன்னது.

ஆசிரியர் எரிச்சலாகி, "சரி, இது யானை இல்லை என்றால், அப்போ இது என்ன?" என்று கேட்டார். "இது யானையின் படம். உயிர் இல்லாத ஓவியம்" என்று குழந்தை பதில் சொல்லியது. குழந்தையின் பதிலை ஆசிரியரால் மறுக்க முடியவில்லை. யானையின் படம் உயிர்ப்புள்ள யானை ஆகிவிடாது என்பதும் அவருக்குப் புரிந்தது. இந்த இடத்தில், குழந்தை ஒரு குருவாகவும், ஆசிரியர் கற்றுக்கொள்ளும் சீடராகவும் மாறிய விந்தை நடந்தது.

நம் அறியாமையை இப்படி யார் வேண்டுமானாலும் உணர்த்தலாம். நாம் யாரிடம் கற்றுக்கொள்கிறோமோ அவர் நமக்குக் குருவாகி விடுகிறார். கற்றுக்கொள்வது என்பது ஒருவரிடம், ஒரு தருணத்தில் மட்டும் நிகழ்வதல்ல! ஒவ்வொருவரிடமும் நாம் கற்றுக்கொள்ள ஏதோ இருக்கிறது. ஒவ்வொரு நாளும் நாம் கற்றுக்கொள்ள ஏதோ இருக்கிறது. அறியாமையிலிருந்து விடுபட ஒருவர் தயாராக இருந்தால், கற்றுக்கொடுப்பவர்கள் வாழ்வில் வந்துகொண்டே இருப்பார்கள்.

ஆப்பிள் நிறுவனத்தின் நிறுவனரான ஸ்டீவ் ஜாப்ஸ், உலக அளவில் அவர் சார்ந்த தொழில் துறையில் மேதையாக இருந்தார். தன்னை மறந்து ஓடிக்கொண்டிருந்த ஸ்டீவ் ஜாப்ஸின் ஓட்டத்தை நிறுத்தி, 'நீடித்த தொழில் வளர்ச்சி எது' என்பதை உணர்த்தினார், மார்க்குலா என்கிற நண்பர். ஸ்டீவ் ஜாப்ஸுக்கு வணிக உத்திகளையும், நிர்வாகத் திறனையும் அவர் கற்றுக் கொடுத்தார். 'ஒரு நிறுவனத்தின் தயாரிப்பு, மக்களின் மனதில் மனநிறைவை உண்டாக்குகிறதா என்பதே முக்கியம்' என்கிற தாரக மந்திரத்தை ஸ்டீவ் ஜாப்ஸுக்குக் கற்றுக்கொடுத்தார்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அஸ்திவாரமாக இந்தக் கொள்கைதான் இருக்கிறது. தொழில் துறையில் அடிக்கடி நிகழும் ஏற்றத்தாழ்வுகளின்போதும், கொரோனா போன்ற தொழிலை முடக்கிப்போடும் நெருக்கடிகளின்போதும் நாங்கள் சோர்ந்து போவதில்லை. 'ராம்ராஜ் காட்டன் நிறுவனத் தயாரிப்புகளை வாங்கும்போது வாடிக்கையாளர்கள் மனநிறைவு அடைய வேண்டும்' என்பதில் சமரசம் செய்துகொண்டதில்லை. மதிப்பிற்குரியவர்களாக வாடிக்கையாளர்களை எப்போதும் போற்றினால், அவர்கள் நம்மை வளர்ப்பார்கள். பல ஆண்டுகாலத் தொழில் துறை அனுபவத்தில் நான் கண்டடைந்த உண்மை இது. மனநிறைவு எய்திய வாடிக்கையாளர்கள் தான், இந்த வெற்றி ரகசியத்தை எனக்குக் கற்றுக்கொடுத்த ஞானகுருக்கள் என்பேன்.



The Culturepreneur

கற்றுக்கொள்ள நாம் தயாராக இருந்தால், வழிகாட்ட குரு நிச்சயம் வருவார். கற்றுக்கொள்ள எப்போதும் தயாராக இருப்போம்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்



# வழிகாட்டும் குரு யார்?

காட்டுக்குள் ஓர் ஆசிரமத்தில் வசித்தார் துறவி ஒருவர். ஏராளமான சீடர்கள் அவரிடம் கல்வி கற்றுவந்தார்கள். அவர்களில் ஒரு சீடன் ஒருநாள் அவரைத் தனியாகச் சந்தித்தான். “குருவே, என் சகோதரிக்குத் திருமணம் நடைபெற உள்ளது. அதற்காக நான் அடுத்த மாதம் ஊருக்குப் போக வேண்டும்” என்றான். “மகிழ்ச்சி, போய்விட்டு வா” என்றார் துறவி.

சீடன் ஏதோ சொல்ல வந்து தயங்கி நின்றான். “என்ன விஷயம்?” என்று கேட்டார் துறவி. “சகோதரியின் திருமணத்துக்கு நீ என்ன செய்யப் போகிறாய் என்று பெற்றோர் கேட்டார்கள். என்னால் எதுவும் பதில் சொல்ல முடியவில்லை” என்றான் அவன். சீடனைக் கூர்ந்து பார்த்த துறவி, “எனக்குப் புரிகிறது” என்று மட்டும் சொன்னார்.

அந்தச் சீடனின் சொந்த ஊர் தொலைதூரத்தில் இருந்தது. மிகவும் வறுமையான குடும்பம். துறவிக்கு ஆசிரமத்தில் எல்லாப் பணிவிடைகளையும் அவன்தான் செய்வான். அவனது பின்னணி எல்லாமே துறவிக்குத் தெரியும்.

ஒரு மாதம் கழித்து அவன் ஊருக்குப் புறப்படும் நாள் வந்தது. ஊருக்குக் கிளம்புவதாகத் துறவியிடம் சொல்ல வந்தான் அவன். துறவி அவனிடம் ஒரு பெரிய பையைக் கொடுத்தார். “இதை எடுத்துக்கொண்டு போ! உன் சகோதரியின் திருமணம் சிறப்பாக நடக்கும். ஊரே அப்படி ஒரு திருமணத்தை இதுவரை பார்த்திருக்காது, இனிமேலும் பார்க்க முடியாது” என்று அவனிடம் சொன்னார். அவனுக்குத் துணையாக இன்னும் இரண்டு சீடர்களையும் அனுப்பிவைத்தார்.

ஆசிரமத்திலிருந்து சிறிது தூரம் வந்ததும் அந்த இரண்டு சீடர்களும், பைக்குள் என்ன இருக்கிறது என்று பார்த்தனர். பை நிறைய மாதுளம்பழங்கள் இருந்தன. அவர்களுக்குக் கோபம் வந்தது. “என்னடா, உன் சகோதரி திருமணத்துக்கு உதவி கேட்டாய். துறவி இந்தப் பழங்களைக் கொடுத்திருக்கிறார். இதை வைத்து எப்படிக் கல்யாணம் நடத்துவது?” என்று அந்த ஏழைச் சீடனைச் சீண்டினார்கள். அவன், “குரு எதைச் செய்தாலும், என்ன சொன்னாலும் அதில் அர்த்தம் இருக்கும். அவரைக் குறை சொல்லாதீர்கள்” என்று கண்டித்தான்.

மூன்று நாட்கள் நீண்ட பயணத்துக்குப் பிறகு அவர்கள் அந்தச் சீடனின் ஊரை நெருங்கினர். அப்போது பக்கத்து நகரத்தில் ஒரே பரபரப்பாக இருந்தது. அந்த நாட்டின் இளவரசிக்குத் திடீரென ஏதோ நோய் வந்திருக்கிறது. அரண்மனை வைத்தியர் அதற்கு மருந்து கொடுத்து, 'இந்த மருந்தை மாதுளைப் பழச்சாறில் கலந்து கொடுத்தால்தான் நோய் சரியாகும்' என்று சொல்லிவிட்டார். அந்த நகரிலேயே அப்போது மாதுளம்பழம் எங்கும் இல்லை. அரண்மனைக் காவலர்கள், "யாரிடமாவது மாதுளம்பழம் இருந்தால் அரண்மனைக்குக் கொண்டு வாருங்கள். மன்னர் நிறைய பரிசு தருவார்" என்று தெருத்தெருவாகத் தண்டோரா போட்டுக்கொண்டு வந்தனர்.

இதைக் கேட்டதும் சீடர்கள் நேரே அரண்மனைக்குப் போய் மாதுளம்பழங்களைக் கொடுத்தனர். இளவரசி நலமானாள். நாட்டிலேயே கிடைக்காத பழங்களை இவர்கள் சரியான நேரத்தில் கொண்டுவந்ததில் மன்னனுக்கு ஆச்சர்யம். இவர்கள் யாரென்று விசாரித்தான். சீடர்களும் தங்கள் குரு மிகச்சரியாக இந்தப் பழங்களைக் கொடுத்து அனுப்பியதில் ஆச்சர்யமாகி, நடந்ததை எல்லாம் சொன்னார்கள்.

"உன் தங்கை கல்யாணத்தை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று சொன்ன மன்னன், உடனே ஆட்களை அனுப்பிவைத்தான். ஊரே வியக்கும்படி ஆடம்பரமாகத் திருமணம் நடந்தது. அரண்மனை சமையல்காரர்கள் விருந்து சமைத்தனர். மணமகளுக்குத் தங்க நகைகளும் வெள்ளிப்பாத்திரங்களும் அரண்மனையிலிருந்து பரிசாக வந்தன. அந்தச் சீடன் குடும்பத்துக்குப் பெரிய வீடு கொடுத்து, ஏராளமான நிலங்களும் கொடுத்தான் மன்னன். தங்கள் குருவை மானசீகமாக வணங்கினான் சீடன்.

குருக்களும் வழிகாட்டிகளும் இப்படித்தான்! ஒருவருக்கு என்ன வேண்டும் என்பதைக் கேட்காமலே உணர்ந்து கொடுப்பார்கள். கேட்கும் ஒன்றைப் பொருத்தமாகவும் கொடுப்பார்கள். சாதாரணமாகப் பார்க்கும்போது, 'நாம் கேட்டதற்கு இது சரியான தீர்வு இல்லையே' என்றுகூடச் சிலருக்குச் சந்தேகம் எழும். ஆனால், இறுதியில் அதுதான் பொருத்தமாக இருக்கும்.

தனிப்பட்ட வாழ்க்கையில், கல்வியில், வேலையிடத்தில், தொழிலில், வியாபாரத்தில் ஒவ்வொருவரும் சிறந்து விளங்குவதற்குச் சரியான வழிகாட்டிகள் தேவை. ஏனெனில்,

- அவர்கள் தங்களின் பழுத்த அனுபவத்தின் மூலம் நமக்குச் சரியான வழியைக் காட்டுவார்கள்.
- மிக மோசமான பாதையில் திசை தெரியாமல் நாம் தடுமாறும்போது, 'இது உனக்குப் பழகிவிடும்' என்று சொல்லி வெளிச்சம் தருவார்கள்.
- நாம் தேர்வு செய்யும் வாய்ப்புகள் மூலம் சரியான இடத்துக்குப் போவோமா, அல்லது ஏதேனும் தவறாகிவிடுமா என்று கணித்துச் சொல்வார்கள்.
- நமக்கு எது சரியாக வரும் என்று நம்மைவிடச் சரியாக அவர்களால் சொல்ல முடியும்.
- நாம் தனியே தன்னந்தனியே தடுமாறும்போது, "நான் இருக்கிறேன் துணையாக" என்று கரம் பற்றி நம்பிக்கை கொடுப்பார்கள்.
- நாம் செய்யும் சின்னச் சின்ன முயற்சிகளையும் பாராட்டி நம்மை ஊக்கப்படுத்துவார்கள்.
- நாம் துயரத்தில் தவிக்கும்போது ஆறுதல் சொல்லி நம்மை மீட்பார்கள்.
- 'இதுவே நமக்குப் போதும்' எனப் பாதுகாப்பான வளையத்துக்குள் நம்மைப் பூட்டிக்கொள்ளும்போது, 'உன்னால் இன்னும் சாதிக்க முடியும்' என்று வெளியே இழுத்துவந்து நம் திறமையை நமக்கு உணர்த்துவார்கள்.



- நமக்குத் தேவைப்படும் பண்புகளையும் திறன்களையும் நமக்குத் தந்து நம் மதிப்பை உயர்த்துவார்கள்.
- அவர்களின் தவறுகளில் கற்றுக்கொண்ட பாடங்களையும் நமக்குப் பகிர்வார்கள். நம் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளவும் உதவுவார்கள்.
- நம் வயதுக்கும் அனுபவத்துக்கும் நாம் ஒரு குறுகிய வட்டத்துக்குள் சுருங்கியிருப்போம். அதைத் தாண்டிப் பலவற்றையும் பல மனிதர்களையும் நமக்கு அறிமுகம் செய்துவைப்பார்கள்.
- எல்லாவற்றுக்கும் மேலாக, 'நாம் வாழ்வில் என்னவாக ஆக வேண்டும்' என்பதற்கு உதாரண மனிதராக இருப்பார்கள். ●

# அநாவசியமாக அது எதற்கு?

போர்க்கலையில் திறமை பெற்ற ஒரு முதிய வீரர் இருந்தார். ஒருநாள் பக்கத்துக் கிராமத்துக்குப் போய்விட்டுப் படகில் வீடு திரும்பினார். படகில் இன்னும் ஏழெட்டுப் பேர் பயணம் செய்தார்கள். சிறிது நேரம் கழித்து அவர்களில் ஒருவன், "நான் பெரிய போர்வீரன். இங்கே யாருக்காவது தைரியம் இருந்தால் என்னுடன் சண்டை போட்டுப் பாருங்கள்" என்று கத்தினான்.

யாரும் வாய் திறக்கவில்லை. ஆத்திரத்தில் அவன் எல்லோரையும் திட்டினான், ஆவேசமாகக் குதித்தான். அந்த முதிய வீரர் உடனே எழுந்து, "தம்பி, கொஞ்சம் அமைதியாக உட்கார். நீ இப்படிக் குதிப்பதால் படகு ஆடுகிறது. இது கவிழ்ந்துவிட்டால் நம் எல்லாருக்குமே ஆபத்து" என்றார்.

அந்த இளைஞன் உடனே அவரைப் பிடித்துக்கொண்டான். "உனக்கு அவ்வளவு அக்கறை என்றால், என்னோடு சண்டைக்கு வா!" என்று சவால் விட்டான். "சரி" என்று ஒப்புக்கொண்டார் அவர். "ஆனால் இங்கே சண்டை போட்டால் மற்றவர்களுக்கு இடைஞ்சலா இருக்கும்.

# அறிவும் நடத்தையும்!



ஒரு மன்னருக்குத் திடீரென ஒரு சந்தேகம். "ஒருவருக்கு அறிவு முக்கியமா, நடத்தை முக்கியமா?" என்று தன் அமைச்சரிடம் கேட்டார். மன்னர் மிகவும் மதிக்கும் நபர் அந்த அமைச்சர். அவர் என்ன சொன்னாலும் மன்னர் கண்ணை மூடிக்கொண்டு கேட்பார். அந்த அமைச்சர், "எனக்குச் சில நாட்கள் அவகாசம் கொடுங்கள். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிறேன்" என்றார் அமைச்சர்.

அன்றே அமைச்சர் அரண்மனை பொக்கிஷ அறைக்குப் போனார். சில தங்கக் காசுகளை எடுத்துத் தன் பையில் வைத்துக்கொண்டார். எடுத்தது அமைச்சர் என்பதால் பொக்கிஷ அதிகாரி எதுவும் சொல்லவில்லை. அடுத்தடுத்த நாட்களிலும் அமைச்சர் இப்படியே செய்ய, பொக்கிஷ அதிகாரி உடனே போய் மன்னரிடம் இதைச் சொல்லிவிட்டார். மன்னருக்குக் கோபம் வந்தது.

மறுநாள் அரண்மனைக்கு வந்தபோது அமைச்சரை வழக்கம் போல மன்னர் புன்முறுவலுடன் வரவேற்கவில்லை. "நீங்கள் பொக்கிஷ அறையில் பொற்காசுகளை எடுத்தது உண்மையா?" என்று கேட்டார். "ஆமாம்" என்று அமைச்சர் சொன்னதும், "ஏன் இந்தத் திருட்டுத்தனம்?" என்று கோபமாகக் கேட்டார் மன்னர்.

# எங்களில் ஒருவன்!

ரயில்வே ஸ்டேஷனில் காத்திருந்தார் பாபு. அப்போது அவரை நெருங்கிய ஒரு சிறுவன், "உங்கள் ஷூவுக்கு பாலீஷ் போடலாமா?" என்று கேட்டான். பரிதாபமாகத் தோற்றமளித்த அந்தச் சிறுவனுக்கு உதவ நினைத்து, "சரி" என்றார் பாபு. ஆனால் அந்தச் சிறுவனால் சுறுசுறுப்பாக பாலீஷ் போட முடியவில்லை. மிகவும் சிரமப்பட்டு ஷூவைத் தேய்த்தான். "வேகமாகத் தேய், இல்லாவிட்டால் ஷூக்கள் வீணாகிவிடும்" என்றார் பாபு. சிறுவன் அப்போதும் மெதுவாகவே தேய்த்தான்.

அப்போது இன்னொரு சிறுவன் அங்கே வந்தான். அவன் அந்த முதல் பையனை ஒதுங்கச் சொல்லிவிட்டு ஷூக்களை வாங்கிப் பரபரவென பாலீஷ் செய்தான். சட்டென்று அவை பளபளக்க ஆரம்பித்தன. அவற்றை ஒருமுறை பார்த்துத் திருப்தியாகி, பாபு காலில் மாட்டிவிட்டான் சிறுவன். அவர் முதல் சிறுவனைப் புறக்கணித்துவிட்டு, இரண்டாவதாக வந்து பாலீஷ் செய்த சிறுவனிடம் பணத்தைக் கொடுத்தார்.

ஆற்றுக்கு நடுவில் ஒரு தீவு இருக்கிறது. நீயும் நானும் அங்கே போய்ச் சண்டை போடலாம்” என்றார்.

முதிய வீரர் அதன்பின் படகோட்டியை நகரச் சொல்லிவிட்டுப் படகை அந்தத் தீவை நோக்கிச் செலுத்தினார். சில நிமிடங்களில் படகு தீவுக்கரையைத் தொட்டது. அந்த வீரன் உருவிய வாளோடு கீழே குதித்தான். அடுத்த நொடியே படகை அங்கிருந்து திருப்பித் தன் ஊரை நோக்கிச் செலுத்தினார் முதிய வீரர். அந்தச் சண்டைக்கார இளைஞனைத் தனியாகத் தீவில் புலம்ப விட்டுவிட்டுப் படகு தன் பயணத்தைத் தொடர்ந்தது.

படகில் இருந்த மற்றவர்கள், “ஐயா, நீங்கள் பெரிய வீரர் என ஊருக்கே தெரியும். உங்கள் வாளை எடுத்து ஒரே போடில் அவன் கதையை முடித்திருக்கலாமே?” என்றார்கள். “உண்மைதான். ஆனால் வாளை உருவாமலே ஜெயிக்கலாம் எனும்போது அநாவசியமாக ஆயுதம் எதுக்கு?” என்றார் அவர். அவரிடமிருந்து வாழ்க்கைப் பாடத்தைக் கற்றார்கள் மற்றவர்கள்.



# குரு கதைகள்

அமைச்சர் சிரித்தார். ‘‘நான் வேண்டுமென்றேதான் எடுத்தேன் மன்னா! இத்தனை நாட்கள் நீங்கள் என் அறிவுக்கு மரியாதை கொடுத்தீர்கள். இன்று என் நடத்தையில் சந்தேகம் வந்ததும், கோபமாகக் குரலை உயர்த்துகிறீர்கள். என் அறிவு இப்போதும் என்னிடம் அப்படியேதான் இருக்கிறது. ஆனால், என் நடத்தை கேள்விக்குறியானதும் என் மதிப்புப் போய்விட்டது. ஒருவருக்கு அறிவு முக்கியம். அதைவிட உயர்வாக, நடத்தை முக்கியம். அது இல்லாவிட்டால் அறிவுக்கு மதிப்பு இல்லை” என்றார் அமைச்சர்.

வித்தியாசமான முறையில் பாடம் கற்ற மன்னர், உடனே அமைச்சரிடம் மன்னிப்புக் கேட்டார்.



அவன் அதை முதல் சிறுவன் கையில் திணித்துவிட்டு அமைதியாக அங்கிருந்து நகர்ந்தான். பாபு ஆச்சர்யமாகி, “என்னப்பா இது? உன் உழைப்புக்குப் பணம் கொடுத்தேன். அதை அந்தச் சோம்பேறியிடம் கொடுக்கிறாயே?” என்று கேட்டார்.

“சார், அவன் நன்கு வேலை செய்பவன்தான். மூன்று மாதங்களுக்கு முன்பு அவனுக்கு ரயிலில் அடிபட்டது. கைகளில் காயம் ஏற்பட்டு இப்போதுதான் சரியாகி வந்திருக்கிறான். அதனால்தான் அவனால் வேகமாகத் தேய்க்க முடியவில்லை. சக உழைப்பாளிகளான நாங்கள்தான் அவனைப் பார்த்துக்கொள்கிறோம். நாங்கள் உதவுவது அவனுக்குக் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. அதனால் அந்தக் கையை வைத்துக்கொண்டு சம்பாதிக்க நினைக்கிறான்” என்றான் அந்தச் சிறுவன்.

முதல் சிறுவனிடமிருந்து தன்மானத்தையும், இரண்டாவது சிறுவனிடமிருந்து உதவும் குணத்தையும் கற்றுக்கொண்டார் பாபு.

# எப்போது மாறும்?

எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வு தரும் துறவி ஒருவர் பக்கத்துக் கிராமத்தில் இருக்கிறார் எனக் கேள்விப்பட்டு, அவரிடம் போனான் ஓர் இளைஞன். தன் குறையை அவரிடம் சொன்னான்.

“ஐயா, எனக்கு ஏகப்பட்ட பிரச்னைகள். எல்லாவற்றையும் மனதில் ஏற்றிக்கொண்டு என்னால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. பிரச்னைகளும் தீர்வதாக இல்லை. ஒரு பிரச்னை தீர்ந்தால், இரண்டு பிரச்னைகள் புதிதாக வருகின்றன. இதனால் தூக்கம் கெட்டுத் தவிக்கிறேன். என் பிரச்னைகள் தீர ஒரு வழி கூறுங்கள்” என்று வேண்டினான்.

துறவி தன் தோட்டத்தில் 100 மாடுகளை வளர்த்து வந்தார். அந்தத் தோட்டத்துக்கு இளைஞனைப் போகச் சொன்னார். “தோட்டத்தில் மாடுகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன எனப் பார்த்துவிட்டு வா” என்றார். சென்றவன் திரும்பி வந்து, “எல்லா மாடுகளும் நின்றுகொண்டு வைக்கோல் தின்கின்றன” என்றான். “நல்லது, அந்த 100 மாடுகளும் தரையில் படுத்தவுடன் அங்கே இருக்கிற ஓய்வறையில் நீ படுத்துத் தூங்கிவிட்டுக் காலையில் திரும்பி வா” என்றார். இளைஞனும் அவரை வணங்கி விடைபெற்றான்.


மறுநாள் காலையில், சிவந்த கண்களும் சோர்வுமாகத் திரும்பி வந்தான். “ஐயா, இரவு முழுவதும் நான் தூங்கவே இல்லை” என்றான்.

“என்ன ஆச்சு?” என விசாரித்தார் துறவி.

‘‘சாயந்திரம் ஆனதும் சில மாடுகள் தானாகவே தரையில் படுத்துவிட்டன. சில மாடுகளை நான் அதட்டிப் படுக்க வைத்தேன். ஆனால், எல்லாவற்றையும் படுக்க வைக்க முடியவில்லை. சில மாடுகள் படுத்தால், சில மாடுகள் எழுந்து கொண்டன. எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் படுக்கவைக்க முடியவில்லை. அதனால் நான் இரவு முழுக்கத் தூங்கவே இல்லை” என்றான்.


துறவி சிரித்தார். “இதுதான் வாழ்க்கை. வாழ்க்கையில் பிரச்னைகளைத் தீர்ப்பது என்பது மாடுகளைப் படுக்க வைப்பது போன்றது. சில பிரச்னைகள் தானாகத் தீர்ந்துவிடும். சிலவற்றை நாம் முயற்சி செய்து தீர்க்கலாம். சில பிரச்னைகள் தீர்ந்தால், வேறு சில பிரச்னைகள் புதிதாக எழலாம். அனைத்துப் பிரச்னைகளும் முடிந்தால்தான் நிம்மதியாக இருப்பேன் என்று நினைத்தால், இந்த உலகத்தில் யாராலும் நிம்மதியாக வாழவே முடியாது.

பிரச்னைகள் அனைத்தும் எப்போது முடியும் எனக் கவலைப்பட்டுக் கொண்டே இருக்காதே. அவற்றை நினைத்தே தூக்கம் தொலைக்காதே! தீர்க்க முடிந்தவற்றைத் தீர்த்துவிட்டு, மற்றவற்றைக் காலத்தின் கைகளில் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக இருக்கக் கற்றுக்கொள். அமைதியான தூக்கமும் கிடைக்கும். மனநிம்மதியும் கிடைக்கும்” என்றார்.



‘அலைகள் ஓய்ந்தால்தான் கடலில் குளிப்பேன்’ என்ற தீர்மானத்துடன் இருப்பவன், கடைசிவரை கடலில் குளிக்க முடியாது. அதுபோலத்தான் வாழ்வில் பிரச்னைகளும்! வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் பிரச்னைகள் என்பவை, துறவி கதையில் வரும் இந்த நூறு மாடுகள் போன்றவையே! அனைத்தும் ஒரே நேரத்தில் படுப்பதற்கான வாய்ப்புக் குறைவே. ஒவ்வொன்றும் படுப்பதற்கு என ஒரு காலமும் உள்ளது. அப்படியே நம் பிரச்னைகள் தீர்வதற்கான காலமும் உள்ளது.

இறைவன் கரங்களில் இவற்றை ஒப்படைத்துவிட்டு, வாழ்வை அமைதியாக அனுபவிப்போம்.



# மகிழ்ச்சி தரும் வேலை எது?

மண்பாண்டம் செய்பவர் ஒருவரும், வைரம் தீட்டுபவர் ஒருவரும் அக்கம்பக்க ஊர்களில் வாழ்ந்து வந்தார்கள். இருவரும் தங்கள் தொழிலில் சிறந்தவர்கள். மண்பாண்டம் செய்பவரின் பானைகளை, தொலைதூர ஊர்களிலிருந்தும் பலர் வந்து விரும்பி வாங்கிச் சென்றார்கள். வைரம் தீட்டுபவர் செதுக்கிக் கொடுக்கும் வைரங்கள், நாட்டிலேயே புகழ்பெற்றவை.

இருவரும் ஒருநாள் சந்தித்தனர். மண்பாண்டம் செய்பவரிடம் வைரம் தீட்டுபவர், “எப்படி இருக்கிறாய்? உன் வேலை எப்படிப் போகிறது?” என்று கேட்டார். மண்பாண்டம் செய்பவர் விரக்தியுடன், “அட போப்பா! நாள் முழுவதும் சகதியை மேலே அப்பிக்கொண்டு, கையெல்லாம் அழுக்காக்கிக் கொண்டு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. பானைகளைச் சுடும்போது சில சமயங்களில் தீக்காயமும் ஏற்படுகிறது. உன்னைப் போல வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டு சுத்தமாகவா இருக்க முடிகிறது?” என்றார்.

அதற்கு வைர வியாபாரி, “உனக்கு என்ன தெரியும் என் வேலையைப் பற்றி? வைரத்தைத் தீட்டுகிறேன் என்று நான் தினம் தினம் என் கையைக் காயப்படுத்திக் கொள்கிறேன். உன் வேலையில் இந்த ஆபத்துக் கிடையாதே. வேலை செய்து கையெல்லாம் புண்ணாகிப் போனதுதான் மிச்சம். ‘ஆபத்து’ என்று தெரிந்தே நாள் முழுவதும் இந்த வேலையைச் செய்ய வேண்டும்” என்று அலுத்துக்கொண்டே, புண்ணாகிப் போன தன் கைகளைக் காட்டினார்.

‘நமக்கு மட்டும்தான் இப்படியா? அல்லது உலகத்தில் யாருக்கும் அவரவர் வேலையில் மகிழ்ச்சி இல்லையா? மகிழ்ச்சியான வேலைதான் எது?’ என்று இருவரும் கேட்டுக்கொண்டனர். அவர்களுக்கு எதுவும் பிடிபடவில்லை.

ஊரில் எல்லோரும் மதிக்கும் ஒரு துறவியிடம் போனார்கள். “ஐயா! எங்கள் வேலையில் எங்களுக்கு நிறைவு இல்லை. அதைச் செய்வதில் அலுப்பும் ஆபத்தும்தான் மிஞ்சுகிறது. எப்போதும் மகிழ்ச்சியாகச் செய்யக்கூடிய வேலை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்” என்று கேட்டார்கள்.

துறவி சிரித்தபடி, “உங்கள் இருவருக்கும் நீங்கள் செய்வதைத் தவிர வேறு வேலை ஏதாவது தெரியுமா?” என்று கேட்டார்.

இருவரும் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துவிட்டு, “தெரியாது” என்று பதில் கூறினார்கள்.

“உலகில் மண்பாண்டங்களும், தீட்டிய வைரங்களும் இயற்கையாகவே கிடைத்தால் என்ன நடக்கும்?” என்று அவர் மீண்டும் கேட்டார்.


“எங்கள் வேலைக்கே மதிப்பில்லாமல் போய்விடும்” எனப் பயத்துடன் பதில் சொன்னார்கள்.

“அப்படியானால் உங்கள் வேலைக்கு என்ன மதிப்பு?” பெரியவர் கேட்டார்.

“களிமண்ணை அழகிய மண்பாண்டமாக உருவாக்குவதும், இயற்கையில் கிடைக்கும் வைரத்தை மின்னல் போல் பளபளக்கச் செய்வதும்தான்” என்று இருவரும் சொன்னார்கள்.

“உலகில் குறைகள் இருப்பதால்தான் உங்கள் இருவருக்கும் வேலை இருக்கிறது. அந்தக் குறைகளை நிறை செய்யும் திறமை இருப்பதால்தான் உங்களுக்கு மதிப்புக் கிடைக்கிறது. அந்தத் திறமை மற்றவர்களைவிட உங்களுக்கு அதிகமாக இருப்பதால்தான், உங்களைத் தேடி வருகிறார்கள். நீங்கள் அதைப் பெரிதாக நினைக்காமல், உங்கள் வருத்தங்களையே கவனிக்கிறீர்கள். மகிழ்ச்சியும் மகிழ்ச்சியின்மையும் உங்கள் பார்வையில்தான் இருக்கிறது. செய்யும் வேலையில் இல்லை” என்றார்.

குறைகளை நிறை செய்யும் வாய்ப்புத் தங்களுக்குக் கிடைத்திருப்பதை உணர்ந்தவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். அவற்றில் உள்ள சிரமங்களை மட்டுமே பார்ப்பவர்களுக்கு வருத்தமே மிஞ்சுகிறது.



## குரு தானாக வருவார்!

குரு என்றால் யார்? குரு என்றால் அவர் தன்னை அறிந்தவர். அவருடைய உதவி ஒரு மனிதனுக்குக் கிடைப்பதற்கு, அவன் ஒரு நிமிடமாவது அதுபற்றிச் சிந்தித்திருக்க வேண்டும்; தேடியிருக்க வேண்டும்.

'நான் பிறந்து வந்துள்ளேனே... என்னைப் பற்றி எதுவுமே எனக்குத் தெரியவில்லையே! நான் அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்' என்று ஒரு மனிதன் தானாக நினைத்திருந்தாலும் சரி, அல்லது அவனுடைய பெற்றோர்கள் நினைத்திருந்தாலும் சரி, அந்த எண்ணம் நிறைவேறாமல் தொடர்ந்து வந்திருந்தாலும் சரி... கட்டாயம் அதற்குரிய ஒரு குருவைத் தேடிக் கொடுத்து விடும்.

ஒரு மனிதனுடைய கர்மா, அவனுடைய செயல், அவனுடைய சிந்தனை, அவனுடைய தெளிவு, அவனுடைய அறிவு, அவனுடைய வேகம் ஆகியவை அவனுக்கு உயர்வு நாட்டத்தைக் கொடுத்து விடுகிறது; அதுவே கால ஓட்டத்தில் குருவையும் கொண்டு வந்து கொடுத்து விடும். அந்தக் குருவின் பார்வை, சொல் ஆகிய எல்லாம் அந்தச் சாதகனுடைய உள்ளுணர்வைத் தூண்டி விடுகின்றன.

## உண்மையான துறவு எது?

"எல்லாவற்றையும் துறந்தால்தான் ஞானம் வரும் என்று சொல்கிறார்களே!" என்று ஓர் அன்பர் கேட்டார். "சரி, துறந்து விட்டால் எங்கே போவீர்கள்?" என்று கேட்டேன். பதில் இல்லை. இந்த உலகத்தின் மேல்தானே இருக்கப் போகிறீர்கள்? பசி எடுத்தால் உணவைத்தானே நாட வேண்டும்? அப்படியென்றால் எதைத் துறந்ததாக அர்த்தம்? இருக்கின்ற இல்லத்தை விட்டு இன்னொரு வீட்டுக்கோ, விடுதிக்கோ சென்றால் என்ன மாற்றம்? இங்கு அதிகாரத்தோடு உணவு கேட்டதற்குப் பதிலாக, அங்கு பிறர் தயவை நாடிக் கையேந்தி வாங்குவதைத் தவிர வேறு என்ன மாற்றம் விளையும்?

துறவு என்றால் அது இல்லை. அளவுமுறை அறிந்து வாழும்போது துறவு தானாக அமைந்து விடும். சாப்பிடுகிறீர்கள், உணவு சுவையாக இருக்கிறது. ஆனால் 'இதுதான் நம் அளவு' என்று அறிந்து அதோடு சாப்பிடுவதை நிறுத்தக்கூடிய அறிவும் செயலும் வந்து விட்டது என்றால், அதுதான் துறவு.


இந்தப் பேருலகம் ஒரு சத்திரம் போன்றது. பிறக்கும் ஒவ்வொருவரும் இங்கு வந்து தங்குகிறோம். நாம் குடிப்புகும் அறையில் முன்பே சிலர் இருந்தார்கள். பிறகும் சிலர் வந்து சேர்கிறார்கள். இதுவே குடும்பம். அவரவர்கள் தங்கவேண்டிய காலம் முடிந்தவுடன் புறப்பட்டு இயற்கையோடு கலந்துவிடுகிறார்கள். வாழும்போது உடன் வாழ்பவர்கள் நட்பு ஏற்படுகிறது. அது முன்னும் இல்லை, பின்னும் இல்லை. ஒருவருக்கு ஒருவர் உதவிக்கொள்ள இந்த நட்புப் பயன்படுகிறது. வாழத் தெரிந்தவர்கள் இந்த நட்பை வளர்த்து வருகிறார்கள். இன்பமடைகிறார்கள்.

எவ்வளவோ பொருட்களைத் தனது என்று உரிமை பாராட்டுகிறோம். இருக்கட்டும். குடல் ஜீரணிக்கும் அளவுக்கு மேல் உணவை உட்கொள்ள முடியுமா? சுமக்கும் அளவிற்கு மேல் ஆடை உடுத்த முடியுமா? உடல் பருமனுக்கு மேல் நிலத்தை அனுபவிக்க முடியுமா? இந்த உண்மைகளை அறிவில் அழுத்தமாகப் பதிவுசெய்துகொண்டு குடும்பத்தில் அவரவர் கடமைகளை ஆற்றினால், அதுவே பற்றற்ற வாழ்வு. நிறைவும் அமைதியும் இந்த நிலையில்தான் கிடைக்கும்.



# குருவும் துறவும்!

## அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி




### அவரே ஞானி!

மனித மனதில் தேவையுணர்வு, விருப்பம் என்று இரண்டு எண்ண எழுச்சிகள் உள்ளன. தேவை என்பது இயற்கையான உணர்வு. அது உடலையும், உயிர் வளர்ச்சியையும் ஒட்டி எழுவது. விருப்பம் என்பது தேவையிலிருந்தும் எழலாம்; கற்பனையாகவும் பழக்கத்திலிருந்தும் எழலாம். உனது தேவையை ஒட்டியதாகவே விருப்பத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டால் நீயே ஞானி. கற்பனையாகவும் பழக்கத்தை ஒட்டியும் எழும் விருப்பங்களை அப்படியே செயல்படுத்த ஆசைப்படக்கூடாது. இதற்காக எண்ணத்தை, உடலை இயங்க விடும்போது, நீ உனக்கு அமைந்த ஞானத்தைப் பயன்படுத்தாத வீணன் ஆகிறாய்.

வீட்டிலும் அக்கம்பக்கத்திலும் நட்பு வட்டத்திலும் யாருடனும் எந்தப் பிரச்னைகளும் இல்லாத வாழ்க்கையை எவர் ஒருவர் வாழ்கிறாரோ, அவர்தான் ஞானி. ஒருவர் பெற்ற ஞானத்தைப் பரிசோதிக்கக் கருவி ஒன்று இருக்குமானால், அது அவரது குடும்ப அமைதிதான்.

### குரு சொல் தேவை!

இறைநிலையின் பரிணாம சரித்திரத்தில், ‘உலகம்’ என்ற அழகிய வளம் பலவும் பொருந்திய நந்தவனத்தில் இறுதியாகப் பூத்த மலர்கள்தான், மதிப்புமிக்க மனித குலம். ஆறாவது அறிவின் சிறப்பைக் கொண்டு, மனத் தூய்மையும் வினைத் தூய்மையும் பெற்று வாழப் படைக்கப்பட்டது மனித இனம். தவிர்க்க முடியாமல் ஏற்படும் புலன் மயக்கங்கள், அறிவின் முழுமையை நோக்கிச் செல்லும் மனிதனுடைய முன்னேற்றத்தை, தடுத்தும் தாமதப்படுத்தியும் வருகின்றன. இதன் விளைவாக உடல்நலம், மனவளம், நட்பு நலம், செல்வப் பெருக்கம் ஆகியவை சீர்குலைகின்றன. இதன்விளைவாகப் பலரும் சோர்வும், துன்பமும், வாழ்க்கைச் சிக்கலும், கவலையும் அடைந்து துன்பமடைகிறார்கள்.



மெய்ப்பொருளாக உள்ள ஆதிநிலையானது அறிவுக்குப் பிடிபடவில்லை. நாம் எங்கேயிருந்து வந்தோம், எதற்காகப் பிறந்திருக்கிறோம், எங்கே போக வேண்டும் என்பது நினைவுக்கே வரவில்லை. அறிவு வளர்ச்சி பெற்றுச் சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைக்க வேண்டும். சூதாட்டத்தில் இறங்கி அந்த மயக்கத்திலே இருக்கிற ஒருவனுக்கு, குடும்பத்தைப் பற்றியோ, லாப நஷ்டத்தைப் பற்றியோ எண்ணம் வராது. அதுபோல இன்ப துன்பம் என்ற ஒரு சூதாட்டத்தின் மயக்கத்திலேயே இருப்பதால், நம்மைப் பற்றிய நினைப்பே நமக்கு எழுவதில்லை.

இந்த இடத்திலேதான் குருவினுடைய பார்வை, குருவினுடைய நினைவு, குருவினுடைய சொல் ஒரு மனிதனின் வளர்ச்சிக்குத் தேவையாக இருக்கிறது.



# அறிவைத் தாண்டி ஞானம் தேடுங்கள்!

கிட்டத்தட்ட அறிவு, ஞானம் இரண்டுக்குமே ஒரே அர்த்தம் என்றாலும், இரண்டுக்கும் இடையே கடலளவு வித்தியாசங்கள் உண்டு. சுருக்கமாகச் சொல்வதென்றால், எதையும் தெரிந்துகொள்வதுதான் அறிவு. அதையும் தாண்டி ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்வதுதான் ஞானம். மூளையின் கட்டளையை ஏற்று நீங்கள் ஒரு செயலைச் செய்தால், உங்களை அறிவு ஆட்சி செய்கிறது என அர்த்தம். ஆனால், மனம் சொல்வதைக் கேட்டு நடக்கத் தெரிந்தால் நீங்கள் ஞானம் பெற்றுவிட்டதாகப் பொருள்.

உதாரணமாக உங்களிடம் நான்கைந்து செல்போன்கள் இருக்கின்றன. ஆனால், சிக்னலே கிடைக்காத ஏதோ ஒரு பிரதேசத்தில் நீங்கள் இருந்தால், உங்களால் போனைப் பயன்படுத்தவே முடியாது அல்லவா? அறிவு என்பது செல்போன் என்றால், சிக்னல்தான் ஞானம்.

அறிவியல்ரீதியாக இரண்டையும் வரையறை செய்திருக்கிறார்கள். ஒரு செயலைத் திட்டமிடுவது, ஒரு புதிய ஐடியாவை உருவாக்குவது, புது விஷயங்களைக் கண்டறிவது, ஒரு பிரச்னைக்குத் தீர்வு காண்பது, கற்பனைத் திறனுடன் செயல்களைச் செய்வது, படைப்புகளை உருவாக்குவது போன்ற எல்லாமே அறிவின் திறமையால் நிகழ்த்தப்படுபவை. ஒருவர் தன்னுடைய மூளையை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறாரோ. அந்த அளவுக்கு அவரின் அறிவுத்திறன் இருக்கும். இதை யாரும் யாரிடமும் கடன் வாங்கிப் பயன்படுத்த முடியாது.

கைரேகைகள் போலவே, எந்த இருவரின் அறிவுத்திறனும் ஒன்று போல இருக்காது. சிக்கலான பிரச்னைகளுக்குத் தீர்வு தேடுவதையும், கடினமான சூழ்நிலைகளைக் கையாள்வதையும் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகச் செய்வதற்குக் காரணம் இதுதான். புத்திசாலிகளால் தங்கள் அறிவைப் பயன்படுத்தி, அடுத்தவர்களின் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். அடுத்தவர்கள் செய்வது தவறு என்பதை உணரவும் முடியும்.

ஞானம் என்பது இதிலிருந்து வேறுபட்டது. தனக்குத் தெரிந்த விஷயத்தை, கற்ற பாடத்தை, அனுபவத்தை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதே ஞானம். அப்படிப் பயன்படுத்துபவருக்கு எது சரி, எது தவறு என்று தெரியும். எது அவசியம், எது ஆசை என்பது புரிந்திருக்கும். நல்லது எது, கெட்டது எது எனப் பிரித்துப் பார்க்கத் தெரியும். எந்தச் சூழலிலும் தனது நலனையும் தாண்டி, பொதுநலனையும் அனுசரித்தே முடிவுகள் எடுப்பார்கள். இரண்டு மிகச்சிறந்த வழிகள் கண் முன்னே இருக்கும்போது, அதில் எந்த வழி சரியானது என்பதை அவர்களால் உணர முடியும். மிக மோசமான சூழலையும் முழுமையாக உணர்ந்து, அதிலிருந்து மீண்டு வருவதற்கு அவர்களால் முடியும்.

அறிவைப் புத்தகங்கள் படிப்பதன் மூலமும், அனுபவங்களின் வழியாகவும் வளர்த்துக்கொள்ள முடியும். காலம் அதைப் பயன்படுத்திப் பார்க்கும் வாய்ப்பைத் தரும்.

ஆனால், ஞானம் என்பது ஒரு வரம் போல வாய்ப்பது. குருக்கள் அதைத் தருவார்கள்.

அடுத்தவர்களைப் பற்றி அறிய உதவுவது அறிவு. நம்மைப் பற்றிய தெளிவுக்கு உதவுவது ஞானம். புத்திசாலித்தனத்துக்கு எல்லைகள் உண்டு. ஞானம் எல்லையற்றது. அறிவுக்கு மருந்து கண்டுபிடித்து மனிதகுலத்தைக் காக்கவும் தெரியும்; அணுகுண்டு போட்டு அழிக்கவும் தெரியும். ஞானம் எப்போதும் நல்லதையே செய்யும். புத்திசாலிகள் இந்த உலகை ஆள்கிறார்கள் என்றால், ஞானம் பெற்றவர்கள் வரலாறாக வாழ்கிறார்கள்.

அறிவு வார்த்தை என்றால், ஞானம் என்பது மொழி. அறிவு இந்த உலகத்தை மாற்றும் என்றால், ஞானம் உங்களை மாற்றும். விடைகளைத் தேடுவது அறிவு; கேள்விகளை உருவாக்குவது ஞானம். அறிவு, பெருமிதமும் கர்வமும் பசியும் பொறுமையின்மையும் தரும்; ஞானம் பணிவையும் நிறைவையும் அமைதியையும் பொறுமையையும் தரும். அறிவு ஓர் ஆபரணம் என்றால், ஞானம் ஒரு புதையல். அறிவு தண்டனை தரும்; ஞானம் மன்னிக்கும்.

நடைமுறை வாழ்விலிருந்தும் இரண்டுக்குமான வித்தியாசங்களை அறிய முடியும்.

- ஊரில் இருப்பதிலேயே மிகச் சிறந்த பள்ளியில் குழந்தையைச் சேர்ப்பது அறிவுப்பூர்வமான முடிவு. ஆனால், பள்ளியைத் தாண்டி வீட்டிலும் சமூகத்திலுமே அந்தக் குழந்தை கற்றுக்கொண்டு வளர்ச்சி பெறும் என உணர்வது ஞானம்.
- பள்ளியிலும் கல்லூரியிலும் பாடத்திட்டம், தேர்வு முறை என எல்லாவற்றையும் அறிந்து கடினமாக உழைத்து முதலிடம் பெற வைப்பது அறிவு. ஆனால், படிக்கும் கல்விக்கும் வாழ்க்கைத் தேவைக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை உணர வைப்பது ஞானம்.



- என்ன சொல்ல வேண்டும் என்பதைத் தெரிந்து வைத்திருப்பவர் அறிவாளி. ஞானம் பெற்றவர், அதை எப்போது சொல்ல வேண்டும் என அறிந்திருப்பார்.
- எப்படிப் பணம் சம்பாதிக்க வேண்டும் எனத் தெரிந்துகொள்ள வைப்பது அறிவு. அதை எப்படிச் செலவிட வேண்டும் என்ற பக்குவத்தைத் தருவது ஞானம்.
- குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் வசதியான வாழ்க்கையை அமைத்துத் தர வேண்டும் என நினைக்க வைப்பது அறிவு. அவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பது அதை மட்டுமே அல்ல என்பதை உணர்த்துவது ஞானம்.
- மகிழ்ச்சியான நேரங்களில் வாழ்க்கைத்துணையுடன் எப்படிப் பேச வேண்டும் என்பதை உணர்த்துவது அறிவு. துன்பமான சூழலிலும், சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வைப்பது ஞானம்.
- பணத்தை முதலீடு செய்ய வைப்பது அறிவு. உறவுகளும் சுற்றமும் நட்பும்தான் சிறந்த முதலீடுகள் எனப் புரிய வைப்பது ஞானம்.
- வீட்டைக் கட்ட வைப்பது அறிவு. குடும்பத்தைச் சிறப்பாகக் கட்டமைக்கச் செய்வது ஞானம்.
- சமூகத்தை நமக்குப் பயனுள்ளதாக மாற்றும் வழியைக் காட்டுவது அறிவு. சமூகத்துக்குப் பயனுள்ளவராக நம்மை மாற்றிக் காட்டுவது ஞானம்.
- தொழில் அல்லது வேலையை நேர்த்தியாகச் செய்ய வைக்க அறிவு உதவும். ஈடுபாட்டுடன் செய்ய வைக்க ஞானம் உதவும்.
- செய்த தவறுகளை ஏற்றுக்கொள்ள வைப்பது அறிவு. அதே தவறுகளைத் திரும்பவும் செய்ய விடாமல் பார்த்துக்கொள்வது ஞானம்.
- ஒவ்வொரு விஷயத்தையும் எப்படிப் பார்க்க வேண்டும் என்ற கருத்தை நமக்கு உருவாக்கித் தருவது அறிவு. அடுத்தவர்களின் கருத்துகளையும் மதிக்க வேண்டும் என்று உணர்த்துவது ஞானம்.

அறிவு நம்மை வாதம் செய்ய வைக்கும், ஞானம் சமாதானம் செய்ய வைக்கும். அறிவு நம்மை இழுத்துச் செல்லும், ஞானம் நமக்கு வழிகாட்டும். 'எனக்கு எல்லாம் தெரியும்' என நினைக்கவைப்பது அறிவு. 'கற்றது கைம்மண் அளவு' என உணர்த்துவது ஞானம். அறிவாளிகள் எல்லோருக்கும் அறிவுரை வழங்குவார்கள். ஞானம் பெற்றவர்கள் அரிதாகவே வழிகாட்டுவார்கள்; அது சரியாகவே இருக்கும். அறிவு சிறந்ததுதான். ஆனால், அதைத் தாண்டி ஞானம் பெறுவது உன்னதமானது. ●

## இப்படிச் செய்தால் தவறா?



குருவிடம் ஒருவன் வந்தான். ‘‘சுவாமி, நான் திராட்சைப்பழங்கள் சாப்பிடலாம்தானே’’ என்று கேட்டான். “தாராளமாகச் சாப்பிடலாம். அவை உடலுக்கு நல்லது” என்றார் குரு. “அந்தப் பழங்களை ஜூஸ் ஆக்கி, கொஞ்சம் ஈஸ்ட் சேர்த்துக்கொள்ளலாமா?’’ என்று அவன் அடுத்துக் கேட்க, ‘‘அதுவும் நல்லதுதான்’’ என்றார் குரு. ‘‘அதில் தண்ணீர் சேர்க்கலாமா?” என அவன் அடுத்துக் கேட்க, “அதில் ஒரு குறையும் இல்லை” என்றார் குரு.

“இதையெல்லாம் சேர்த்து ஊறவைத்துப் பிறகு அருந்தினால், அதை மது என்கிறார்கள். அது உடலுக்குக் கெடுதல் என்கிறார்கள். அதை அருந்துவது எப்படித் தவறாகும் சுவாமி”

## பழக்கமே பயிற்சி தரும்!

அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழகத்தில் கலைத்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர் ஜெர்ரி உல்ஸ்மான். அவர் தன்னிடம் புகைப்படக்கலை பயின்ற மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தார்.

ஒரு குழுவுக்கு, “நீங்கள் நிறைய புகைப்படங்கள் எடுங்கள். சிறந்த புகைப்படம் எடுக்க வேண்டும் என அவசியமில்லை. எத்தனை புகைப்படங்கள் எடுக்கிறீர்கள் என்ற எண்ணிக்கையை வைத்து உங்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்” என்றார். இன்னொரு குழுவுக்கு, “எண்ணிக்கை முக்கியமில்லை. மிகச்சிறந்த புகைப்படங்களை எடுத்துக் கொடுங்கள். அதை வைத்து மதிப்பெண் வழங்கப்படும்” என்றார்.

அந்த ஆண்டின் இறுதியில்தான் அவர் ஓர் ஆச்சர்யமான விஷயத்தைக் கவனித்தார். அவர் மாணவர்களில் மிகச்சிறந்த புகைப்படங்களை எடுத்தவர்கள், முதல் குழுவில் இருந்தவர்கள்தான். அவர்கள் நிறைய புகைப்படங்கள் எடுத்ததால், அது ஒரு பழக்கமாக அவர்களுக்குக் கைவந்திருந்தது. தங்கள் தவறுகளைத் திருத்திக்கொண்டு, அனுபவங்களைக் கூடப்பெற்று, திறமைகளை வளர்த்துக்கொண்டு அவர்கள் மெருகேறி இருந்தார்கள். அதனால் அவர்கள் அடுத்தடுத்து எடுத்த படங்களில் சிறப்புத்தன்மை கூடியது. இன்னொரு குழுவினரோ, சிறந்த படங்களை எடுப்பதற்கான திட்டமிடலுக்கும், அதற்கான முறையைத் தேடுவதற்கும் நிறைய நேரத்தைச் செலவிட்டனர். அதனால் அவர்களுக்குப் போதுமான பயிற்சி கிடைக்கவில்லை.

நன்கு பயிற்சி எடுப்பதன் மூலமே திறமை காலப்போக்கில் கைகூடும் என்பதை அவர் புரிந்துகொண்டார். சிறந்த பயிற்சியே உண்மையான குரு!

## இப்படி வழிகாட்டக்கூடாது!

கேரம் விளையாட்டின் சுவாரசியம் பலருக்குப் பிடிக்கும். முதலில் நீங்கள் எந்த காயினை எடுப்பது என்று திட்டமிடுவீர்கள். அதை எங்கிருந்து ஸ்ட்ரைக்கரால் அடிப்பது, எந்த மூலையில் காயினை வீழ்த்துவது என்றெல்லாம் அடுத்துத் திட்டமிடுவீர்கள். அதற்குச் சரியான வேகத்தை உங்கள் விரலால் கொடுக்க வேண்டும். அப்படி அடுத்து ஒரு காயினை எடுத்தால் உங்கள் தன்னம்பிக்கை கூடும். நிம்மதியும் நிறைவும் கிடைக்கும். வெற்றி பெற்றால், ‘என் முயற்சியில் நான் ஜெயித்தேன்’ என்ற மகிழ்ச்சி கிடைக்கும்.

கேரமில் டபுள்ஸ் விளையாட்டு உண்டு. ஒரே அணியைச் சேர்ந்த இருவர் எதிரெதிரே அமர்ந்து இணை சேர்வார்கள். அப்போது சீனியர் ஒருவர் உங்கள் எதிரில் அமர்ந்துகொண்டு, “இந்த காயினைப் போடு, இங்கிருந்து அடி” என்று உத்தரவு போடுகிறார். நீங்கள் சரியாகச் செய்யாவிட்டால் திட்டுகிறார். பதற்றத்தில் நீங்கள் தவறுகள் செய்கிறீர்கள். ஆட்டம் முடிந்ததும், ‘அவர் பேச்சைக் கேட்காமல் நான் சுயமாக ஆடியிருந்தால் எங்கள் அணி ஜெயித்திருக்கும்’ என்ற உணர்வு தோன்றும். ஒருவேளை ஜெயித்திருந்தாலும், பெரிதாக சந்தோஷம் இருக்காது.

என்று அவன் அடுத்துக் கேட்டான்.

குரு அவனைக் கூர்மையாகப் பார்த்தார். ‘‘சரி, உன்னிடம் ஒரு கேள்வி. ஒரு கைப்பிடி மண்ணை அள்ளி உன் தலையில் போட்டால் உனக்கு வலிக்குமா?’’ என்று கேட்டார். “வலிக்காது சுவாமி” என்றான் அவன். “மேலும் சிறிது நீரை ஊற்றினால்?’’ எனக் குரு கேட்க, “அதுவும் வலிக்காது” என்றான். “சரி, மண்ணையும் தண்ணீரையும் சேர்த்துக் குழைத்துச் செங்கல்லாக அறுத்து, அதைச் சூளையில் சுட்டு உன் தலையில் போட்டால் என்ன ஆகும்?’’ என்றதும், “மண்டை உடையும்” என்றான் அவன்.

“உன் கேள்விக்கான பதில் இதுதான்” என்றார் குரு.





ஏனெனில், அந்த வெற்றியில் உங்கள் பங்கு எதுவும் இல்லை.

ஒரு சரியான வழிகாட்டி இப்படிச் செய்ய மாட்டார். அவர் உங்களின் இயல்பு என்ன, உங்களுக்கு என்ன வலிமை இருக்கிறது, எது பலவீனமாக இருக்கிறது என்று புரிந்துகொண்டு வழிகாட்டுவார். இரவு நீண்ட நேரம் கண்விழித்துப் படித்துவிட்டுக் காலையில் கூடுதல் நேரம் தூங்கும் இயல்பு கொண்ட ஒருவரை, ‘அதிகாலையில் எழுந்து படிக்க வேண்டும்’ என வற்புறுத்துவது தவறு. அவரின் இயல்பில் எப்படிச் சிறப்பாகப் படிப்பது என்பதைக் கண்டறிந்து சொல்வது மட்டுமே வழிகாட்டியின் வேலை. இப்படிப்பட்ட குருவின் வழிகாட்டுதல் பெறுங்கள். வாழ்க்கை எனும் விளையாட்டில் எப்போதும் ஜெயிப்பீர்கள்.

## உண்மையை அறிந்துகொள்!

நகரத்திலிருந்து கிராமத்துக்குவந்து நிலம் வாங்கி விவசாயம் செய்தான் ஓர் இளைஞன். “நான் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க அழகிய ஆர்க்கிட் மலர்களைப் பயிரிட இருக்கிறேன். அவற்றை அக்கறையாகப் பராமரித்து, கவனமாகப் பறித்து எடுக்க எனக்கு ஆட்கள் தேவை” என்று அனுபவசாலி விவசாயி ஒருவரிடம் கேட்டான்.

“மூன்று மாதங்கள் கழித்து ஆட்கள் தருகிறேன்’’ என்றார் விவசாயி. அதேபோல மூன்று மாதங்கள் கழித்துச் சிலரை அனுப்பி வைத்தார். அவர்கள் தன் தோட்டத்துச் செடிகளை நீரூற்றி அக்கறையாகப் பராமரிப்பதையும், விலையுயர்ந்த மலர்களைக் கவனமாகப் பறித்து வைப்பதையும் கண்டு மகிழ்ந்தான் இளைஞன்.

விவசாயியைச் சந்தித்து நன்றி சொல்லி, ‘‘எதற்காக இவர்களை அனுப்ப உங்களுக்கு மூன்று மாதங்கள் தேவைப்பட்டது?’’ என்று கேட்டான். ‘‘நான் அந்த மூன்று மாதங்களும் இவர்களைக் காகிதப் பூக்கள் செய்கிற தொழிற்சாலைக்கு வேலை பார்க்க அனுப்பினேன். அங்கே வாசனையற்ற பொய் மலர்களைப் பார்த்தவர்களுக்கு உண்மையான பூக்களின் மதிப்புத் தெரிந்தது. அதனால்தான் இப்போது அக்கறையாக வேலை பார்க்கிறார்கள். போலியிலிருந்து உண்மையைப் புரிந்து கொள்ளும்போதுதான் அது வரமாக வாய்க்கிறது” என்றார் விவசாயி.



# அன்பின் வலிமை!

ஒருவர் வளரும் சூழலும், இளமைப்பருவத்தில் கிடைக்கும் வாழ்க்கை அனுபவங்களுமே அவரது எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 'சேற்றில் முளைத்த செந்தாமரை' போல மாற்றம் பெற முடிகிறவர்கள் வெகுசிலரே! அப்படி மாறுவதற்கு, இளம் வயதில் கிடைக்கும் அனுபவங்கள் மட்டுமே உதவும். மானிடவியல் ஆய்வுகள் மூலம் உலகம் கண்டறிந்த விஷயம் இது.

ஜான் ஹாப்கின்ஸ் என்னும் ஆய்வாளர், ஏழைகள் குடியிருக்கும் ஒரு பகுதிக்குச் செல்கிறார். எப்போதும் சண்டை, சச்சரவுகள் நிகழும் பகுதி அது. பொதுக்குழாயில் தண்ணீர் பிடிப்பதற்குக்கூடச் சண்டை போட வேண்டியிருக்கும். முரட்டுத்தனமாக இருப்பவர்கள் மட்டுமே பிழைக்க முடியும் என்பது போன்ற சூழல் அங்கு நிலவியது.

நகரில் குற்றங்கள் பல செய்யும் குற்றவாளிகள் ஏராளமானவர்களுக்கு வசிப்பிடம் என்பதால், அவர்களுக்கும்போலீஸாருக்கும்மோதல்நடந்துகொண்டே இருக்கும். தினம் தினம் அப்படிப்பட்ட கதைகளைக் கேட்டும், அந்தக் குற்றவாளிகளை நேரில் பார்த்துமே அந்தப் பகுதி சிறுவர்கள் வளர்ந்தார்கள்.

ஜான் ஹாப்கின்ஸ் அந்தப் பகுதியில் 200 சிறுவர்களைத் தேர்ந்தெடுக்கிறார். அவர்களின் விவரங்களைப் பதிந்து தன் மாணவர்களிடம் கொடுத்தார். ''இவர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும் என யூகியுங்கள்'' என்றார்.

அந்தச் சிறுவர்களைச் சந்தித்து உரையாடி, அவர்களின் வாழ்க்கைச்சூழல் உள்ளிட்ட எல்லாவற்றையும் கணக்கிட்ட ஹாப்கின்ஸின் மாணவர்கள், "சார்! இவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்காது. இந்தச் சூழல் இவர்களைச் சமூக விரோதச் செயல்களைச் செய்ய வைத்துவிடும். இவர்களில் பலர் எதிர்காலத்தில் குற்றவாளிகளாக இருப்பார்கள், சிலர் சிறையில் இருப்பார்கள்'' என்றனர்.

20 வருடங்கள் கழித்து மீண்டும் அந்தக் குடியிருப்புக்கு அதே மாணவர்கள் சென்றார்கள். தாங்கள் ஏற்கனவே பதிவு செய்திருந்த 200 சிறுவர்களும் இப்போது வளர்ந்திருப்பார்களே, அவர்கள் என்னவாக ஆனார்கள் என்று விசாரிக்கிறார்கள்.


200 பேரில் 180 பேர் பற்றிய லேட்டஸ்ட் தகவல் கிடைக்கிறது. ஆச்சர்யம். அவர்களில் இரண்டே நபர்கள்தான் சிறையில் இருந்தார்கள். மற்ற அனைவரும் ஓரளவுக்கு மதிக்கத்தக்க நல்ல நிலையிலேயே இருந்தார்கள்.

'எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது' என்று அவர்களுக்கு ஆச்சர்யம். அந்த 180 பேரையும் சந்தித்து விசாரித்தபோது, அனைவரும் ஒரே ஆசிரியரிடம் படித்தவர்கள் என்று தெரிகிறது. அந்த ஆசிரியர் மீது அவர்கள் பெரும் மதிப்பு வைத்திருந்தனர். தாங்கள் இந்த நிலையில் இருப்பதற்கு அவரே காரணம் என்றனர்.

அவர்தான் மாற்றத்துக்குக் காரணம் என்பது புரிந்து, ஆய்வாளர்கள் அந்த ஆசிரியரிடம் போனார்கள். "இவர்களின் வாழ்வை மாற்றியது நீங்கள்தான் என்று தெரிகிறது. நீங்கள் இவர்களுக்கு அப்படி என்ன சொல்லிக் கொடுத்தீர்கள்'' என்று கேட்டனர். அந்த ஆசிரியர் யோசித்து யோசித்து, எதுவும் புரியாமல் திணறினார்.

கடைசியாக நினைவு வந்தவராய், ''நான் எல்லா ஆசிரியர்களையும் போலவே பாடப் புத்தகத்தில் உள்ளதைத்தான் சொல்லிக் கொடுத்தேன். ஆனால், அன்பாகச் சொல்லிக் கொடுத்தேன். என் மாணவர்களை அன்பாக நடத்தினேன். அன்பின் வலிமையை அவர்களுக்குப் புரிய வைத்தேன்'' என்றார்.

சிறு வயதில் கிடைக்கும் அன்பு, குழந்தைகளுக்கு வாழ்க்கையின் மீது நம்பிக்கையைக் கொடுக்கும். அது அவர்களுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தும். அன்பான வழிகாட்டிகள் அனைவருக்கும் அவசியம். ●


LINEN PARK®
DHOTIS • SHIRTS • TROUSERS • FABRICS
by
RAMRAJ
CULTURAL Vibe
CULTURE WITH
A MODERN TWIST
Shop Online @ www.ramrajcotton.in


RAMRAJ ©
BAMBOO
COTTON
WHITE SHIRTS
WHITE
SHIRTS இல்
ஒரு அல்டிமேட்
UPGRADE
வழங்குகிறோம் Ramraj
Bamboo Cotton White Shirts இது
விரைவில் உலரும் தன்மையுடன்,
இயற்கையோடு இயற்கையாய்,
மிருதுவாய், மென்மையாய்
தருமே நேச்சுரல் கம்ஃபர்ட்.
ராம்ராஜ் ஷோரூம்கள் மற்றும் முன்னணி
ஜவுளி நிறுவனங்களிலும் கிடைக்கும்
Shop Online @ www.ramrajcotton.in


RAMYYAM®
SAREES • KURTIS
Product by
RAMRAJ


Culture India™
TRADITIONAL KURTAS ● DHOTIS
BY
RAMRAJ
CULTURAL
VIBE
CULTURE WITH
A MODERN TWIST
Shop Online @ www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



‘உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்’ என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.


**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net


சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421–4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



# நல்ல குரு... அன்பான குரு!

அறிவியலை வித்தியாசமான முறையில் மாணவர்களுக்குச் சொல்லித் தருவார் ராமச்சந்திரன் சார். ஒரு மரத்தைப் பற்றிய பாடம் என்றால், அந்த மரத்தை நேரில் காட்டிப் பாடம் எடுப்பார். ஒரு விலங்கைப் பற்றிய பாடம் என்றால், அந்த விலங்கை முடிந்தால் காட்டுவார்; அல்லது அதன் படங்களைத் திரையிட்டுக் காட்டி விளக்குவார். அதனால், அவர் வகுப்பு என்றாலே பிள்ளைகள் ஆர்வமாகிவிடுவார்கள்.

ஒருநாள் அவர் திடீரென்று, “டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த ஒரு விலங்கு பற்றிச் சொல்கிறேன்” என்று ஓவியம் ஒன்றைக் காட்டினார். கங்காரு மாதிரி விநோதமாக இருந்தது அது. “இதன் பெயர் வாட்டிகேம்பஸ். இதற்கு எட்டுக் கால்கள், நீளமாக வால் இருக்கும், இரவில்தான் வேட்டையாடும்...” என்றெல்லாம் நீண்ட நேரம் விளக்கினார். அதன்பின், “நான் சொன்னதைப் பற்றியெல்லாம் இன்னும் கொஞ்சம் இணையதளத்தில் தேடிப் படிச்சிக்கிட்டு வாங்க, நாளைக்கு ஒரு டெஸ்ட் வைப்பேன்” என்றார்.

அடுத்த நாள் தேர்வு. வாட்டிகேம்பஸின் கால்கள் எத்தனை, வால் எவ்வளவு நீளம் என்று அவர் கேட்ட அத்தனை கேள்விகளுக்கும், அவர் நடத்திய பாடத்தை நினைவு வைத்தே பதில் எழுதினார்கள் மாணவர்கள். எல்லோரது விடைத்தாள்களையும் உடனே திருத்திய அவர், அனைவருக்குமே பூஜ்ஜியம் மார்க் போட்டிருந்தார்.

‘‘ஏன் சார்?’’ என்று பலரும் கேட்டனர். ‘‘உங்களுக்கு ஓர் உண்மையைச் சொல்ல வேண்டும். வாட்டிகேம்பஸ் என்று ஒரு விலங்கே கிடையாது. நான் காட்டியது கற்பனை ஓவியம், நான் சொன்ன எதுவுமே நிஜமில்லை. அதனால்தான் உங்களை மேலும் படித்துவிட்டு வரச் சொன்னேன். ஆனால், யாருமே தேடிப் படிக்கவில்லை என்பது புரிகிறது. தேடியிருந்தால், ‘அப்படி எதுவுமே இன்டர்நெட்டில் இல்லையே சார்’ என்று என்னிடம் காலையிலேயே கேட்டிருப்பீர்கள்” என்றார்.

மாணவர்கள் அனைவரும் தலைகுனிய, அவர் மீண்டும் சொன்னார். ‘‘யார் எது சொன்னாலும் கண்மூடித்தனமாக நம்பிவிடக்கூடாது என்பதுதான் இதன்மூலம் நான் கற்றுக்கொடுக்க விரும்பிய பாடம்.”

நல்லாசிரியர்களும் அன்பாசிரியர்களும் இப்படித்தான் எல்லா வழிகளிலும் கற்றுத் தருவார்கள். பாடங்களைத் தாண்டிய கல்வியாக அது இருக்கும். வகுப்பறைத் தேர்வுகளைக் கடந்து வாழ்க்கை முழுக்கவும் உதவும் பாடங்கள் அவை. அடங்க மறுக்கும் மாணவர்களிடம்கூட அக்கறை காட்டிக் கற்றுத் தருவார்கள் அவர்கள். எல்லோருக்கும் முன்னுதாரணமாக இருக்கும் அப்படிப்பட்ட ஆசிரியர்களிடம் இந்தக் குணங்கள் நிச்சயம் இருக்கும்.

● **கனிவுடன் நடப்பது:** கண்டிப்புக் காட்டும் அதே நேரத்தில் கருணையும் பொழிவதே ஒரு நல்லாசிரியரின் பண்பு. மாணவர்களிடம் அவர்களின் வயதுக்கு இறங்கிப் பழகுவார்கள் இந்த ஆசிரியர்கள். அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு பக்குவமாக வழிநடத்துவார்கள். அவர்களின் கல்விநிலையைத் தாண்டி, குடும்பத்தைப் பற்றியும் தெரிந்துகொண்டு அவர்களை நெறிப்படுத்துவார்கள்.

● **நேர்மறையான மனநிலை:** ஆசிரியர்களும் சராசரி மனிதர்கள்தான். குறும்பும் அடங்காத குணமும் கொண்ட பிள்ளைகளை வகுப்பறையில் கவனிக்கும்போது, ஏதோ ஒரு தருணத்தில் அவர்கள் எரிச்சலடையக்கூடும். அன்பான ஆசிரியர்கள் அந்த நேரத்தில் நிதானம் காப்பார்கள். மாணவர்கள் மன அழுத்தத்தில் சிக்கித்

தவிக்கும்போது, கோபத்தை வெளிப்படுத்தி அவர்களை நிலைக்குலைய வைக்க மாட்டார்கள். ஏனெனில், ஆசிரியரின் கோபம் அத்தனை மாணவர்களையும் பாதிக்கும் என்று அவருக்குத் தெரியும்.

• **பேச்சுத் திறமை:** ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு மிகச்சிறந்த பேச்சாளர். மாணவர்களை, அவர்களின் நிலைமை அறிந்து அன்பாசிரியர்களே பேசி ஊக்கப்படுத்துகிறார்கள். நல்ல மதிப்பெண் எடுக்கும் மாணவர்களை இன்னும் சிறப்பாகப் படிக்க வைக்கும் அவர்களின் பேச்சு! தோல்வியில் துவண்டவர்களை ஆசிரியர்களின் ஆறுதல் மொழியே மீட்டு வரும்.

• **மரியாதை கொடுப்பது:** தன்னைவிட வயதில் குறைந்தவர்கள் என்பதற்காக மாணவர்களை நல்லாசிரியர் எவரும் மரியாதைக் குறைவாக நடத்த மாட்டார்கள். ஒருவரின் வயது, தோற்றம், பின்னணி, நிறம், சமூகம் என்று எந்த வித்தியாசத்தையும் பார்க்காமல், எல்லோரையும் நேசிக்க வேண்டிய சக மனிதர்களாகப் பார்ப்பது அன்பாசிரியர்களின் பழக்கம். இப்படி மரியாதை கொடுத்து, அவர்களின் தன்னம்பிக்கையை வளரச் செய்து ஒவ்வொருவரையும் கைதூக்கி விடுவார்கள்.

• **வித்தியாசம் உணர்வது:** ஒரு வகுப்பறையில் 40 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால், எல்லோரையும் ஒரே மாதிரி நடத்துவார்கள். அதே சமயத்தில் ஒவ்வொருவரும் தனித்தனி இயல்புகள் கொண்டவர்கள் என்பதைப் புரிந்து வைத்திருப்பார்கள். ஒவ்வொருவரின் கற்றல் திறனுக்கு ஏற்றபடியும் தனித்தனியே பார்த்துச் சொல்லிக் கொடுப்பார்கள். ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியே பேசவைத்து, அவர்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்துகொள்வார்கள். அதேபோல, ஒரு மாணவர் தப்பு செய்துவிட்டார் என்பதற்காக ஒட்டுமொத்த வகுப்பறையையும் தண்டிக்க மாட்டார்கள்.

• **முன்மாதிரிகளைக் காட்டுவது:** ஒரு வகுப்பறையில் சிலர் பிரச்னைக்குரியவர்களாக இருக்கும்போது, அதை நல்லாசிரியர்கள் சாதுர்யமாகச் சமாளிப்பார்கள். அந்த வகுப்பிலேயே நல்ல மதிப்பெண்கள் வாங்கும், அமைதியாக நடக்கும் மாணவர்களைச் சுட்டிக்காட்டி, “இவர்களைப் பற்றிய நல்ல விஷயங்களைச் சொல்கிறேன்” என்று பாராட்டுவார்கள். மற்றவர்களுக்கும் பாராட்டு வாங்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படும்.

• **பிரச்னைகளைச் சமாளிப்பது:** வகுப்பில் அடங்காத மாணவர்கள் வாக்குவாதம் செய்யும்போது, அவர்களுடன் சரிக்குசமமாகக் கத்த மாட்டார்கள். அவர்களின் கோபத்துக்கான காரணத்தை விளக்கமாகக் கேட்டு, அந்தக் கோபத்தில் அர்த்தமே இல்லை என்பதைப் புரியவைப்பார்கள். வகுப்பைப் பார்த்துக்கொள்வது, கற்றல் தேவைகளைக் கவனிப்பது போன்ற பொறுப்புகளை அவர்களுக்குக் கொடுத்துத் திசைதிருப்புவார்கள். அவர்களுக்கு அக்கறை எடுத்துப் பாடம் சொல்லித் தருவார்கள்.

• **பரிசாக உணர்வது:** நல்லாசிரியர்களும் அன்பாசிரியர்களும், ஆசிரியர் பணியை அரிதான பரிசாகக் கருதுவார்கள். அடுத்த தலைமுறையின் வாழ்க்கையைச் செதுக்கும் மாபெரும் பொறுப்புத் தங்களுக்கு இருப்பதை உணர்வார்கள். பல பேரின் எதிர்காலத்தையே மாற்றும் மகத்தான கடமை தங்களுக்கு இருப்பதை அறிவார்கள். ●


RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

# வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 10 இதழ் 2

ஆகஸ்ட் 2025

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**K. உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

A2, தரை தளம்,

எண்.110, டிரினிடி காம்ப்ளக்ஸ்,

நான்காவது அவென்யூ,

அசோக் நகர், சென்னை - 600 083.

கைப்பேசி: 9952920801

email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by

K.R. NAGARAJAN,

Published from

10, Sengunthapuram

Mangalam Road,

TIRUPUR - 641 604.

Ph: 9842274137



# முழுமையாகப் பாருங்கள்!

தன் வீட்டு வாசலில் இருக்கும் இரும்புக் கதவு பழுதானதால், அதை வெல்டிங் மூலம் சரிசெய்ய ஒரு பணியாளரைக் கூப்பிட்டார் மூர்த்தி. வந்த பணியாளர் 4,000 ரூபாய் கேட்டார். "என்னப்பா இவ்வளவு சொல்றே? இது சின்ன வேலை, இதுக்கு 2,000 ரூபாயே அதிகம்" என்றார் மூர்த்தி.

வந்தவர் ஒரு நிமிடம் யோசித்தார். "இதை 2,000 ரூபாய்க்குள் செய்துவிட முடியும். ஆனால், அதுக்கு நீங்களே வெல்டிங் செய்துக்கணும்" என்றார். "எனக்கு வெல்டிங் தெரியாதே" என்றார் மூர்த்தி. "ஒரு மணி நேரத்துல கத்துக்கலாம். எனக்கு 500 ரூபாய் கொடுத்தால் போதும், பிரமாதமாகக் கற்றுத் தருகிறேன். உங்களுக்குக் காலத்துக்கும் பயன்படும்" என்றார்.

"சரி, எப்போ கற்றுத் தருவீங்க?" என்று மூர்த்தி கேட்டதும், "அடுத்த செவ்வாய்க்கிழமை மதியம் எங்க பட்டறைக்கு வாங்க சார், சொல்லித் தர்றேன்" என்றார் பணியாளர். "மதிய நேரத்துல என்னால் வர முடியாதே! நான் வேலைக்குப் போகணும். எனக்கு ஞாயிற்றுக்கிழமை மட்டும்தான் லீவ்" என மூர்த்தி சொல்ல, "நான் எப்போ ஃப்ரீயா இருக்கேனோ, அப்போதானே சார் கற்றுத் தர முடியும்" என்றார் பணியாளர்.

மூர்த்தி யோசித்து, "சரி, ஒருநாள் லீவ் போட்டுடறேன், கத்துக்கறேன். அதுக்கப்புறம்?" என்றார். "வெல்டிங் மெஷின், கையில் போட்டுக்கற ரப்பர் கிளவுஸ், அதுக்கான ஸ்பெஷல் கண்ணாடி எல்லாமே நானே வாடகைக்குத் தர்றேன். ஒரு ஆட்டோ எடுத்துக்கிட்டு வந்தீங்கன்னா எல்லாத்தையும் மொத்தமா நீங்களே ஏத்தி வீட்டுக்குக் கொண்டு வந்துடலாம். வேலை முடிஞ்சதும் அதே மாதிரி ஆட்டோவில் பத்திரமா எடுத்துவந்து கொடுத்துடணும். 1,000 ரூபாய் வாடகை ஆகும். ஆட்டோவுக்கு நீங்க காசு கொடுத்துடுங்க. மெஷினை ரெண்டு பேர் பிடிச்சு ஏத்தி இறக்கணும். உங்களோட இன்னொரு ஆள் வச்சுக்கங்க. அப்புறம் வெல்டிங் ராடு, இன்னும் சில பொருட்கள் தேவைப்படும். எந்தக் கடையில கிடைக்கும்னு சொல்றேன். வாங்கிக்கோங்க" என்றார் பணியாளர்.

"இருங்க, நீங்க சொல்றதைப் பார்த்தா இது பெரிய வேலையா இருக்கும் போலிருக்கே!" என்றார் மூர்த்தி.

"அதனால்தான் சார் அந்தத் தொகை கேட்டேன். ஒரு வேலையைச் செய்ய நீங்க பணம் தர்றீங்கன்னா, அந்த வேலையை எப்படிச் செய்தால் சரியா இருக்கும்னு தீர்மானிக்கற அவரின் அறிவு, செய்பவரின் அனுபவம், அவர் கத்துக்கிட்ட கல்வி, பயன்படுத்தும் பொருட்கள், அவர் செய்யும் வேலை, அதுக்குச் செலவழிக்கிற நேரம், அதற்கான பயணம், அந்த வேலையைச் செய்யற சூழலின் பாதுகாப்பு, அந்த வேலையின் தரத்துக்கு அவர் தருகிற உத்தரவாதம்... இப்படிப் பல விஷயங்களுக்கும் சேர்த்துதான் பணம் தர்றீங்க. சிலர் பேராசைக்காரர்களாக இருக்கலாம். எல்லா உழைப்பாளிகளையும் அப்படி எடை போடாதீர்கள்" என்றார் அந்தப் பணியாளர்.

ஒரு வேட்டியின் விலையில் அதை நெய்த நெசவாளரின் உழைப்பு, அனுபவம், அவர் செலவழித்த நேரம், தரமான நூலைத் தேடி வாங்குவதில் ஒரு நிறுவனம் காட்டும் அக்கறை எனப் பல விஷயங்கள் அடங்கியுள்ளது. இதுபோல ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொரு சேவையிலும் அடங்கியுள்ள அனைத்தையும் பார்க்கக் கற்போம். ●

# வழிகாட்டும் குரு மொழிகள்!

கடுமையான போக்குவரத்து நெரிசலில் கார்களும் இருசக்கர வாகனங்களும் சிக்கித் தவித்தன. சாலையின் இரண்டு பக்கங்களிலும் நிறைய வாகனங்கள். சைக்கிளில் வந்த ஒருவர், வாகனங்களுக்கு இடையே கிடைத்த இடைவெளியில் தன் சைக்கிளை முன்னால் நகர்த்தினார். சீக்கிரமே நெரிசலிலிருந்து விடுபட்டு முன்னேறிச் சென்றுவிட்டார்.

ஒரு காரில் உட்கார்ந்திருந்த குரு ஒருவர் தன் சீடருக்கு இதைக் காட்டினார். "எப்படி அவரால் முன்னேற முடிந்தது தெரியுமா? அவரது வாகனம் சிறியது. வாகனங்கள் பெரிதாவது போல, நம் ஈகோவும் பெரிதானால் முன்னேற்றத்துக்குத் தடை. ஈகோ இல்லாதவர்கள் எளிதில் முன்னேறலாம்" என்றார் குரு.

**இப்படி வாழ்வில் முன்னேற வழிகாட்டும் சில குரு மொழிகள்:**

- உங்கள் சிந்தனையில் என்ன இருக்கிறதோ, அதன் வடிவமாகவே நீங்கள் மாறுகிறீர்கள். சிறந்த எண்ணங்களை மனதில் நிரப்புங்கள்.
- இந்த உலகில் வெற்றியாளர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். காரணம், மிகப்பெரிய ரிஸ்க் எடுப்பவர்களுக்கே வெற்றி வாய்க்கிறது. ரிஸ்க் எடுக்கத் தயங்காதீர்கள்.
- ஒவ்வொரு பின்னடைவையும், மாறுவேடத்தில் வந்த வரமாக நினையுங்கள். ஒவ்வொரு பிரச்னையையும் மாறுவேடத்தில் வந்த வாய்ப்பாக நினையுங்கள். விரைவில் வெற்றி வரும்.



- கைநழுவிப் போன வாய்ப்புகளை நினைத்து வருத்தம் வேண்டாம். இன்னும் நிறைய வாய்ப்புகள் வாசல் வந்து கதவைத் தட்டும். வசப்படுத்தத் தயாராக இருங்கள்.
- வாழ்க்கையில் பலருமே முன்னேறுவதற்கான போராட்டத்தில்தான் இருக்கிறார்கள். சோம்பலைத் தவிர்த்து, முன்னேறும் வழியைத் தேடுங்கள்.
- வாழ்க்கையில் வெற்றியை வேகமாகப் பெற வேண்டுமா? 99% மக்கள் என்ன செய்கிறார்களோ, அதைச் செய்வதைத் தவிர்த்துவிடுங்கள். வித்தியாசமான பாதையைத் தேர்வு செய்யுங்கள்.
- எல்லோரும் செய்கிறார்களே என்பதற்காகத் தொழிலும் வியாபாரமும் செய்யாதீர்கள். பணம் இருக்கிறது என்பதற்காகவும் பிசினஸை ஆரம்பிக்காதீர்கள். மக்களின் தேவையைத் தீர்ப்பதற்காக ஒரு தொழில் அல்லது வியாபாரத்தைத் தொடங்குங்கள், ஜெயிக்கலாம்.
- ஓர் எறும்பு தன்னைவிடப் பத்து லட்சம் மடங்கு பெரிய அளவில் எறும்புப்புற்றை உருவாக்குகிறது. உங்களாலும் தொழில் அல்லது வியாபாரத்தில் பிரமாண்ட சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க முடியும்.
- பணத்தின் பின்னால் ஓடாதீர்கள். ஒரு சிறந்த வேலை, தொழில் அல்லது வியாபாரத்தை அர்ப்பணிப்புடன் செய்தால், பணம் உங்களைத் தேடி ஓடிவரும்.
- பேராசை என்பதற்கு, நாளைய பசிக்கான உணவை இன்றே சாப்பிடுவது என அர்த்தம். அபத்தமாகச் செய்யும் அப்படிப்பட்ட மனிதராக இருக்காதீர்கள்.
- பயனுள்ள, அர்த்தமுள்ள செயல்களையே எப்போதும் செய்யுங்கள். தேவையற்ற செயல்களில் இழக்கும் நேரத்தை, பிறகு என்ன செய்தும் ஈடுகட்ட முடியாது.
- எத்தனையோ மனிதர்களும், எப்படிப்பட்ட சூழலும் உங்களுக்கு எதிராக இருந்தாலும், உங்கள் திறமையில் நம்பிக்கை வைத்து செயலில் இறங்குங்கள்.
- வெற்றியின் ரகசியம் என்பது, எதைச் செய்தாலும் மகிழ்ச்சியுடன் செய்வதில்தான் இருக்கிறது. ஒன்றுமே செய்யாமல் சும்மா இருப்பவர்களைவிட, மகிழ்ச்சியுடன் முயற்சி செய்து தோல்வியைச் சந்திப்பவர்கள் மேலானவர்கள்.
- எந்த ஒரு முயற்சியிலும் தோற்றுவிடுவோமோ என்று பயப்படாதீர்கள். பயத்தை முதலில் வெற்றிகொள்ளுங்கள். எந்தச் செயலிலும் வெற்றிபெறும் நிலைக்கு உயர்வீர்கள்.

# வாழ்க்கைத்துணையைப் பாராட்டுங்கள்!



⌘ குடும்பத்தினர் அனைவருக்குள்ளும் உறுதியான, நெருக்கமான, உண்மையான இனிய நட்பு நிலவ வேண்டும். குடும்ப அமைதிக்கு இது மிக அவசியம். குறிப்பாக, கணவன் மனைவிக்கிடையே எக்காரணத்தாலும் தளராத அன்புப் பிடிப்பு வேண்டும். பழுதுபடாத கணவன் – மனைவி உறவே குடும்ப அமைதிக்கு அஸ்திவாரம்.

⌘ தம்பதியர் ஒருவரை மற்றவர் துல்லியமாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் கருத்தை மற்றவர் மதிக்க வேண்டும். தலையெடுக்கக்கூடிய கருத்து வேறுபாடுகளையும் மனம் விட்டும், தைரியமாகவும், வெளிப்படையாகவும் பேசி அன்போடு தீர்த்துக்கொள்ள வேண்டும்.

⌘ கணவன், மனைவிக்குள் தேவைப்படும் இடத்தில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருவருக்குமே வேண்டும். இருவரில் யார் அதிக அறிவாளி என்று அறிந்துகொள்ள வேண்டுமா? யார் அதிகமாக விட்டுக் கொடுக்கிறார்களோ அவர்தான் இருவரில் அதிக அறிவாளி.

⌘ குடும்ப அமைதியைப் பெற, சலனமில்லாததும் விசாலமானதுமான மனம் வேண்டும். எதையும் தாங்கும் இதயம் என்பார்களே, அது இங்கேதான் வேண்டும். எல்லயற்ற பொறுமையும் சகிப்புத்தன்மையும் தேவை. எவ்வளவு பெரிய குழப்பமானாலும் பொறுமை ஒன்றினாலேயே வெற்றி கண்டு விடலாம். காலம் இதற்கு உதவும்.

⌘ பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமையும், பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும். அதே போல் பிறர் கூறும் கடுஞ்சொற்களையும் அவை சொல்லப்படாதது போல் பாவித்து ஒதுக்கிவிட வேண்டும். அப்போது தான் அமைதி பிழைக்கும்.

⌘ குடும்பத்தை நீங்கள் நிர்வாகம் செய்கிறீர்கள் என்றால் அங்கே உங்கள் அறிவுதான் நிர்வாகியாக இருக்க வேண்டும். எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணத்திற்காகவும் உணர்ச்சிகள் நிர்வாகியாகக் கூடாது. இல்லாவிட்டால் எப்போதும் சண்டை சச்சரவுகளே நீடிக்கும்.

⌘ மனைவிக்குத் தெரியாமல் கணவனோ, கணவனுக்குத் தெரியாமல் மனைவியோ சம்பாதிப்பதும், செலவு செய்வதும், சேர்த்து வைப்பதும் பின்னால் பிரச்னைகளுக்கு இடம் தரும். அதனால் இவர்களுக்குள் இருக்க வேண்டிய தெய்வீக உறவு இருக்காது. ஒருவர் செய்யும் எதுவும் இன்னொருவருக்குத் தெரியாமல் வாழக்கூடாது. மனதில் ஒளிவுமறைவை வைத்துக்கொண்டால் குடும்பத்தில் அமைதி வராது.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

⌘ கணவரைக் கவர்ந்திழுக்கப் பெண்களுக்கு முக அழகு மட்டுமே போதாது. அக அழகும் தேவை. துணிச்சல், விடாமுயற்சி, நன்றியுணர்வு, சுயநலமில்லா அன்பு, அமைதி பாராட்டுதல் போன்ற அக அழகுகள் தேவை.

⌘ அலுவலகத்தில், தொழில் செய்யும் இடத்தில் யார் யாரையோ பாராட்டும் பலர், வீட்டில் வாழ்க்கைத்துணையைப் பாராட்ட வேண்டும் என்பதை மறந்துவிடுகிறார்கள். இதை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். கணவன் மனைவிக்குள் நல்ல இணக்கத்தை இது ஏற்படுத்தும். இதேபோல ஆண்கள் எல்லோருமே பெண்கள் பாராட்டுவதைப் பெரிதும் விரும்புவார்கள். அதையும் நினைவில்கொள்ளுங்கள்.



⌘ அமைதியாக எதையும் கையாள்வது, அடுத்தவர் உணர்வுகளைப் பரிவுடன் கவனிக்கும் உயர்ந்த பழக்கம். வேதங்கள் மற்றும் அனைத்துச் சமூக இதிகாசங்களிலும் இதுவே போதிக்கப்படுகிறது. குடும்பப் பெண்களுக்கு மிகவும் தேவையானது. கணவன், குழந்தைகள், வீட்டிலுள்ள பெரியோர்கள் மட்டுமில்லாமல் வீட்டுக்கு வரும் உறவினர்களையும் சாந்தமாக நடத்துவது நல்லது. இதுபோன்ற பெண்கள் உள்ள வீடுகளை 'மகாலட்சுமி குடியிருக்கும் வீடு' என்று பலரும் போற்றுவார்கள்.

⌘ ஒருவரை நேசிப்பதில் தன்னலமற்ற அன்பு இருந்தால் மட்டுமே அடுத்தவரின் தேவைகளையும் நம்மால் பூர்த்தி செய்ய முடியும். கணவன் மனைவி இடையில் நிலையான உறவை உருவாக்கிக்கொள்ள இது அவசியம். கணவன் மனைவி இருவரும் தம்பதியராக மட்டும் இருக்காமல், ஒருவருக்கொருவர் தன்னலமற்ற அன்பு காட்டும் நண்பர்களாகவும் இருக்கவேண்டும்.

⌘ கணவனும் மனைவியும், 'ஒருவருக்கு இன்னொருவர் ஒத்துழைத்து, ஒருவர் மனதை அடுத்தவர் புரிந்துகொண்டு, உதவிகள் செய்து வாழ்வதற்காகவே நமக்குத் திருமணம் செய்து வைத்துள்ளார்கள்' என்பதை உணர வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வதே திருமண பந்தம். அதற்குப் பதிலாக, ஒவ்வொருவரும் ஒருவிதமான பிடியைப் பிடித்துக் கொண்டு, 'என் கருத்துதான் உயர்ந்தது' என்று வீம்பு காட்டினால், வீண் சண்டைதான் வரும்.

**ஆகஸ்ட் 30**

**மனைவி நல வேட்பு தினம்**

⌘ இறைவன் தரும் வரம், இறைவன் தரும் படிப்பினை என எல்லாமே, கணவனுக்கு மனைவி மூலமாகவும், மனைவிக்குக் கணவன் மூலமாகவும்தான் அதிகமாகக் கிடைக்கும்.

⌘ 'இறைவனே மனைவியினுடைய வடிவத்திலே வந்து எனக்கு உறுதுணையாக இருக்கிறார்' என்று கணவன் எண்ண வேண்டும். 'இறைவனே எனக்குக் கணவன் என்ற உறவிலே வந்து உறுதுணையாக அமைந்திருக்கிறார்' என்று மனைவி நினைக்க வேண்டும். இப்படிக் கணவனும் மனைவியும் மனதை உயர்த்திக்கொண்டால், இல்லற வாழ்க்கையில் இதுவரை அனுபவித்திராத மலர்ச்சி உண்டாகும்.

⌘ உலகில் இதுவரை தந்தையர் தினம், அன்னையர் தினம் கொண்டாடுகிறார்கள். 'சுமங்கலி பூஜை' என்ற அளவிலே கணவன் நலனுக்காக ஒரு நாளை பெண்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால், மனைவியைக் கொண்டாட ஒரு தினம் இல்லை. இது என் மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. ஆனாலும், ஒருவர் தலையிட்டுச் செய்தால் மட்டும் போதாது. நாடு முழுவதும் ஆண்கள் அனைவரும் இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

'ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 30ம் தேதியை மனைவி நல வேட்பு தினமாகக் கொண்டாடுவது வழக்கமாக வரட்டும்' என்றேன். ஆண்களும், பெண்களும் உற்சாகமாக அதை ஏற்றுக்கொண்டு பல இடங்களில் கொண்டாடுகிறார்கள். நீங்களும் உங்கள் வாழ்க்கைத்துணையை நன்றியோடு வாழ்த்தி இக்கவியைச் சொல்லி மகிழுங்கள்.

பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரை விட்டுப்
பிரிந்து வந்து, பெருநோக்கில் கடமையறம் ஆற்றப்,
பற்றற்ற துறவியெனக் குடும்பத்தொண்டேற்றுப்
பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாய்க் கொண்டுளென்
நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நல நோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

# வழிகாட்டிகள் தரும் பாடம்!



ஒரு துறவி மிகவும் பிரமாண்டமாக ஆசிரமம் ஒன்றைக் கட்டுவதற்கு முடிவெடுத்தார். அதற்காகத் தனது பக்தர்களிடம் நன்கொடை வசூலிக்க நீண்ட பயணம் மேற்கொண்டார். ஒவ்வோர் ஊரிலும் பெரிய மனிதர்களைச் சந்தித்து தனது கனவு ஆசிரமத் திட்டத்தை விளக்குவார். அவர்கள் உடனே பணமும், பொருட்களும் கொடுப்பார்கள்.

இப்படிப் பயணத்தில் நிறைய பொருட்களும் பணமும் சேர்ந்துவிட்டதால், அவர் தனது சீடர்களிடம் அவற்றைக் கொடுத்து, பாதுகாப்பாக ஆசிரமத்தில் கொண்டு போய் வைக்கும்படிச் சொன்னார். அவர் மட்டும் தனியாகப் பயணத்தைத் தொடர்ந்தார். வழியில் ஒரு கிராமத்தைக் கடக்கும்போது திடீரெனப் பெரும் மழை வந்துவிட்டதால், அவரால் தொடர்ந்து பயணம் செய்ய முடியவில்லை. வயல்வெளிகளுக்கு நடுவில் தனியாக இருந்த ஒரு குடிசையைப் பார்த்தார். அவசரத்துக்கு வேறு வழியில்லை என அந்த வீட்டின் வாசலில் தன் வாகனத்தை நிறுத்தினார்.

அந்தக் குடிசையில் இருந்த இளம்பெண் அவரை அன்புடன் வரவேற்றார். எளிய குடிசையாக இருந்தாலும், அது தூய்மையாக இருந்தது. துறவியை உபசரித்து அவருக்குத் தண்ணீர் கொடுத்த இளம்பெண், உடனடியாக உணவு சமைத்துச் சுடச்சுட அவருக்குப் பரிமாறினார். சொந்த வயலில் விளைந்த பொருட்களில் சமைத்தது என்பதால், உணவு அவ்வளவு ருசியாக இருந்தது.

மழை தொடர்ந்து பெய்தபடி இருந்ததால், துறவியை அங்கேயே ஓய்வெடுக்கும்படி இளம்பெண் கேட்டுக்கொண்டார். அந்த வீட்டில் ஒரே ஒரு மரக்கட்டில் இருந்தது. அதன் மீது ஒரு பாயை விரித்து, துறவியை அதில் தூங்கும்படிச் சொன்ன இளம்பெண், வீட்டின் வாசலருகே சென்று வெறும் தரையில் படுத்தார். அடுத்த நிமிடம் தூங்கிவிட்டார்.

துறவியோ ஆசிரமத்தில் மென்மையான மெத்தையில் படுத்துத் தூங்கிப் பழகியவர். அவருக்கு இந்தப் பாயும் மரக்கட்டிலும் முதுகில் குத்துவது போல இருந்தது. புரண்டு புரண்டு படுத்தார். தூக்கமே வரவில்லை. ‘இந்தப் பெண்ணால் எப்படிக் கரடுமுரடான கட்டாந்தரையில் படுத்த அடுத்த நிமிடம் தூங்கிவிட முடிந்தது?’ என்று அவருக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை.

அதிகாலையில் எழுந்து தனக்குக் குளிப்பதற்குச் சுடுதண்ணீர் வைத்துத் தந்து, காபி கொடுத்து உபசரித்த அந்தப் பெண்ணிடமே ஆச்சர்யத்துடன் அதைக் கேட்டார். அந்தப் பெண் பணிவாக அதற்கான காரணத்தைச் சொன்னார். “சுவாமிஜி, எனக்கு இந்தச் சிறிய குடிசைகூட அரண்மனை மாதிரிதான். ஒவ்வொரு நாளும் மூன்று வேளை உணவு கிடைத்துவிட்டால் போதும், என்னை அதிர்ஷ்டசாலியாக நினைத்துக்கொள்வேன். நாள் முழுக்கக் கடுமையாக உழைப்பேன். அன்று செய்த நல்ல செயல்களை இரவு படுத்ததும் நினைத்துக்கொள்வேன். பூமாதேவி நம் எல்லோருக்கும் தாய். அவர் மடியில் படுத்து உறங்குவதாகக் கற்பனை செய்வேன். அடுத்த நிமிடம் தூங்கிவிடுவேன். கடினமான தரையில் படுத்திருப்பதாக நினைப்பு எழுந்ததே இல்லை” என்றார் அந்தப் பெண்.

அவரைக் கரம் குவித்து வணங்கிய துறவி, “என் மனதை மாற்றிய உங்களை வணங்குகிறேன். நான் பிரமாண்ட ஆசிரமம் கட்டத் திட்டமிட்டேன். அது

வேண்டாம் என முடிவு செய்துவிட்டேன். எளிய குடிலில் கட்டாந்தரையில் இனி படுத்துத் தூங்குவேன். ஆசிரமத்துக்காக வசூலித்த பணத்தை எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகச் செலவிடுவேன்” என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

யாரும் யாருக்கும் வழிகாட்டி ஆகிவிட முடியும். ஒருவரின் வளர்ச்சிக்கு உதவும் பாடங்களை வழிகாட்டிகளே தருகிறார்கள். வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை, கல்வி என்று எதிலும் சரியான வழிகாட்டிகளை எப்படித் தேடி அடைவது?

⊙ தங்கள் சொல்லும் செயலுக்கும் வித்தியாசம் இல்லாமல் வாழும் மனிதர்களை வழிகாட்டியாகக் கருதுங்கள். அவர்கள்தான் நேர்மையான வழிகாட்டிகளாக இருப்பார்கள். நீங்கள் ஏதோ ஒரு துறையில் இருக்கிறீர்கள். அந்தத் துறையில் நன்கு விஷயம் தெரிந்தவர்கள் பலர் இருக்கலாம். ஆனால், நேர்மையாக நடப்பவர் எவரோ, அவரை வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்தான் தனக்குத் தெரிந்ததைச் சரியாகக் கற்றுக்கொடுப்பார்.

⊙ வழிகாட்டுதல் என்பது ஒருவழிப் பாதை இல்லை. அனுபவம் அதிகம் இல்லாத இளைஞர் ஒருவருக்கு, அனுபவசாலியான நடுத்தர வயதுக்காரர் வழிகாட்டுகிறார் என வைத்துக்கொள்வோம். இளைஞர் தன் துறையில் இருக்கும் லேட்டஸ்ட் தொழில்நுட்பங்கள் அனைத்தையும் அறிந்து வைத்திருப்பார். நடுத்தர வயதுக்காரரோ, அந்தத் துறையில் அனுபவங்களைக் கரைத்துக் குடித்திருப்பார். இருவருமே தங்களுக்குத் தெரிந்ததைப் பகிர்ந்துகொள்ளும்போது, அங்கே வழிகாட்டுதல் முழுமை பெறும்.

⊙ தண்ணீரில் பிடித்துத் தள்ளாமல் ஒருவருக்கு நீச்சல் கற்றுத் தர முடியாது. ஆனால், சிறந்த பயிற்சியாளர் இதை நேர்த்தியாகச் செய்வார். ஒருவரை எவ்வளவு தூரம் வரை, எவ்வளவு ஆழம் வரை போக அனுமதிப்பது பாதுகாப்பானது என்பதை அவர் அறிந்திருப்பார். கற்றுக்கொள்ளும் நபரின் இடுப்பில் கயிற்றைக் கட்டி, அதைத் தன் கையில் பிடித்துக்கொண்டு அந்த எல்லை வரை செல்ல அனுமதிப்பார். சிறந்த வழிகாட்டிகள் இப்படித்தான் ஒருவரை, அவரின் திறமையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வழிசெய்யும்விதமாகப் பாதுகாப்பான எல்லை வரை செல்ல வைப்பார்கள். அதன்மூலம் வாழ்வில் உயர்வதையும் உறுதி செய்வார்கள்.

⊙ தனது தன்னலமற்ற வழிகாட்டுதல் மூலம் எவரும் ஜெயிக்க வேண்டும் என்று சிறந்த குருக்கள் ஆசைப்படுவார்கள். எனவே, தாங்கள் கற்றுக்கொண்ட எல்லாவற்றையும் சொல்லித் தந்துவிட ஆசைப்படுவார்கள். தன்னிடம் கற்றுக்கொண்டவர்கள் சுயமாகப் பொறுப்பேற்று ஒவ்வொரு செயலையும் செய்வதைப் பார்த்துப் பெருமிதம் அடைவார்கள்.

⊙ சிறந்த வழிகாட்டிகள் யாரும் தங்களிடம் கற்றுக்கொள்ள வருபவர்களை மரியாதைக்குறைவாக நடத்த மாட்டார்கள். அவர்களைச் சக மனிதர்களாக நட்புடன் மதித்துப் போற்றுவார்கள். இயந்திரத்தனமாக எதையும் கற்றுத் தர மாட்டார்கள். எப்படிக் கற்றுத் தந்தால் முழுமையாக உள்வாங்க முடியுமோ, அப்படிப்பட்ட வழியில் கற்றுத் தருவார்கள். எந்தச் சூழலிலும் தங்கள் மாணவர்களுக்காக நேரம் செலவிடத் தயங்க மாட்டார்கள். காலம் முழுக்கவும் சிறந்த நண்பர்களாக இருப்பார்கள். ●


வெண்மை
சந்தா...

# மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~280~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)



# யார் நமக்கு வழிகாட்டுவார்?

சிறந்த பாடங்களையும், வாழ்க்கை வழிகாட்டுதல்களையும் கற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும் ஒருவர், ஒரு கோழியைக்கூடக் குருவாக ஏற்கலாம். சிலர் இதை வேடிக்கையாக நினைக்கலாம். ஆனால், உண்மை.

● ஒரு கோழி தன் இனத்தைப் பெருக்க நினைக்கும்போது, முதலில் நிறைய முட்டையிடுகிறது. அதன்பின் அந்த முட்டைகள் மீது உட்கார்ந்து அடைகாக்கிறது. எப்போது, எத்தனை முட்டைகளை இட்டு அடைகாப்பது என்று அதனிடம் சரியான திட்டமிடல் இருக்கிறது. எந்தச் செயலிலும் திட்டமிடல் முக்கியம்.

● அடை காக்கும் நாட்களில் அது நடமாட்டத்தைக் குறைத்துக்கொண்டு, முட்டைகளுக்குச் சூடு தந்து அவற்றைப் பொரிக்கச் செய்வதில் குறியாக இருக்கிறது. தன் கடமையில் முழுக் கவனம் செலுத்தும் இந்த ஒழுக்கமும் அவசியம்.

● அடை காக்கும்போது தனக்கான தீனியைக் குறைத்துக்கொண்டு, தன் எடையைக் கணிசமாகக் குறைத்து முட்டைகளில் மட்டும் கவனம் செலுத்துகிறது. தன் தேவைகளையும் தன் வசதிகளையும் குறைத்துக்கொள்ளும் இந்தத் தியாகமே, ஒரு செயலில் முழுக் கவனம் செலுத்த வைக்கிறது.

● ஒரு கோழி, தான் அடை காக்கும் முட்டைகளுடன் வேறு கோழிகளின் முட்டைகளை வைத்தாலும், அது பாரபட்சம் காட்டி ஒதுக்குவதில்லை. பெருந்தன்மையுடன் அவற்றையும் அடை காக்கிறது. நாம் எந்தச் செயலைச் செய்தாலும், அடுத்தவர்களுக்குப் பாரபட்சமின்றி உதவும் குணம் இருந்தால், நமக்கான உதவிகள் கிடைக்கும்.

● ஒரு தாய்க்கோழி மூன்று வாரங்களுக்குத் தொடர்ச்சியாக அடை காத்து தன் முட்டைகளிலிருந்து குஞ்சுகளைப் பொரிக்கச் செய்கிறது. ஒருவேளை அந்த முட்டைகளில் ஒன்றுகூடப் பொரிக்காவிட்டாலும் அது மனம் தளர்வதில்லை. மீண்டும் முட்டைகள் இட்டு, அடை காக்கத் தயாராகிறது. எவ்வளவு மோசமான தோல்வியிலும் மனம் தளரக்கூடாது, நம்பிக்கையை இழக்கக்கூடாது.

● அடை காக்கும் நேரத்தில் சில முட்டைகள் சேதமடைந்து இருக்கலாம். அவற்றைக் கவனித்து அந்தக் கோழி அப்புறப்படுத்தி விடுகிறது. ஒரு செயலில் இறங்கும்போது, ஏதாவது சரிவரவில்லை என்றால் அதை விட்டு ஒதுக்கிவிட வேண்டும்.

● இருபது முட்டைகளை அடை காத்து ஒரே ஒரு முட்டை மட்டுமே பொரித்தாலும், அந்த ஒற்றைக் கோழிக்குஞ்சுக்குத் தாய்க்கோழி முழுக் கவனமும் கொடுக்கிறது. எதிர்பாராமல் நேரும் நெருக்கடிகளை

‘இதுதான் உண்மை’ என ஏற்றுக்கொள்ளும்போது அடுத்தக் கட்டத்துக்குச் சென்றுவிடலாம்.

● ஒரு தாய்க்கோழி எப்போதும் தன் கோழிக்குஞ்சுகளை ஒற்றுமையாகத் தன் கூடவே வைத்துக்கொள்கிறது. தன் கவனத்துக்கு வராமல் எதுவும் நடந்துவிடக்கூடாது என்ற இந்த அக்கறை ஒவ்வொரு செயலிலும் அவசியம்.

● கோழிக்குஞ்சுகளை என்ன ஆபத்து நெருங்கினாலும், தாய்க்கோழி சீற்றத்துடன் அந்த ஆபத்தை நீக்கும். தன் குஞ்சுகளை அன்புடன் பாதுகாக்கும். எப்படிப்பட்ட சூழலிலும் நிலைகுலையாமல் நம் செயலில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கான உதாரணம் இது.

● குஞ்சுகள் வளர்ந்து பெரிதாகும்வரை அவற்றைத் தாய்க்கோழி தனியாக விடுவதில்லை. தன் கூட்டத்திலிருந்தும் கைவிடுவதில்லை. அவற்றுக்கு வழிகாட்டுகிறது. இரை தேடுவதில் ஆரம்பித்து, எதிரிகளைத் துரத்துவது வரை எப்போதும் தானே முன்னால் நிற்கிறது. அதுவே தலைமைப் பண்பு.

ஒரு குரு, இப்படிப்பட்ட பல பண்புகளுடன் நமக்கு வழிகாட்டுவார். வியாபாரம், தொழில், வேலை, கல்வி, வாழ்க்கைச்சூழல்கள் என்று எதற்காகவும் ஒருவர் ஒரு குருவின் வழிகாட்டுதல் தேடலாம். தனது அனுபவங்கள் மற்றும் அறிவைப் பயன்படுத்தி அவர் வழிகாட்டுவார். ஒருவரின் கவலைகளையும் கேள்விகளையும் தீர்ப்பார். அவர்கள் சொல்வதை மட்டுமில்லை, சொல்லாததையும் புரிந்துகொண்டு தீர்வுகள் தருவார். அப்படிப்பட்ட வழிகாட்டியிடம் சில பண்புகள் இருக்கும்.

**சரியான அனுபவம்:** ஒரு துறையில் வியாபாரம், தொழில் அல்லது வேலை செய்யும் ஒருவர், அது தொடர்பான நிபுணத்துவம் பெற்றவரிடம்தான் வழிகாட்டுதல் கேட்க வேண்டும். அந்தத் தொழிலைப் பற்றி எதுவுமே தெரியாத ஒருவரிடம் யோசனை கேட்டால், அவர் தவறான பாதையில் வழிநடத்தக்கூடும். வயதிலோ, அனுபவத்திலோ மேலானவரிடம்தான் தீர்வுகளைத் தேட வேண்டும். அவர் தன் நீண்ட அனுபவத்தில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து அவர் பல வழிகளைக் கண்டுபிடித்திருப்பார். அதனால் சிறந்த தீர்வுகளைத் தருவார்.

**ஆர்வம்:** அடுத்தவர்களுக்கு வழிகாட்டுவதில் அவருக்கு ஆர்வம் இருக்க வேண்டும். திறந்த மனதுடன் தன் அனுபவங்களைப் பகிரத் தயாராக இருக்க வேண்டும். யாரையும் பாரபட்சமாகப் பார்க்காத மனிதராக இருக்க வேண்டும். எந்தப் பாதையில் உங்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும் என்பதை அவர் ஆர்வத்துடன் தீர்மானிக்க வேண்டும்.

**மரியாதை:** வயது, தகுதி, பொருளாதாரச் சூழல் என்று எதை வைத்தும் மனிதர்களிடம் உயர்வு, தாழ்வு பார்க்காத பண்பு அந்த வழிகாட்டிக்கு இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களே, தாங்கள் இருக்கும் இடத்தையும், சந்திக்கும் மனிதர்களையும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் கனிவுடன் வழிகாட்டுவார்கள், தவறுகளை ஆரோக்கியமான விமர்சனத்தால் சுட்டிக்காட்டுவார்கள், முன்னேற்றத்தைப் பாராட்டுவார்கள்.

**நேர்மை:** தங்கள் செயல்களில் நேர்மை உள்ளவர்களே சிறந்த வழிகாட்டிகள். அவர்களின் நோக்கமும் எதிர்பார்ப்பும் தெளிவாக இருக்கும். பாரபட்சமில்லாத பார்வையுடன் எதையும் அணுகுவார்கள். வெளிப்படையான செயல்பாடுகள் அவர்களிடம் இருக்கும்.

**கவனம்:** ஒருவர் சொல்லும் பிரச்னைகளைப் பொறுமையாகக் காதுகொடுத்துக் கேட்கும் குணம் அவர்களிடம் இருக்கும். சரியான கேள்விகளைக் கேட்டு ஒருவரின் பிரச்னையை அறிய முற்படுவார்கள். சொல்வதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு கனிவுடன் வழிகாட்டுதல் தருவார்கள்.

இப்படிப்பட்ட வழிகாட்டிகளை வாழ்வில் தேடி அடையுங்கள். ●



# வாசகர் கடிதங்கள்

‘மனம் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம். அதை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நம் இன்பமும் துன்பமும் அமைகிறது’ என்று ‘மதிப்பிற்குரியவர்களுக்கு’ கடிதத்தில் நிறுவனர் கே.ஆர்.நாகராஜன் குறிப்பிட்டது நூற்றுக்கு நூறு உண்மை.

***– கரு.இராமநாதன், காரைக்குடி.***

மனதை வளப்படுத்துவதற்கு வழிகாட்டும் நற்சிந்தனைகளுடன் வெளியான ‘வெண்மை’ மனம் சிறப்பிதழ் பயனுள்ள தொகுப்பு. ‘வெண்மை’ இதழைப் படித்து வாழ்வில் பயன்படுத்தினால், மனம் நமக்கு நல்வழிகாட்டியாக மாறும்.

***– கே.மல்லிகா, சென்னை-89.***

ஒவ்வொரு மாதமும் ஒரு தலைப்பு. அது தொடர்பான நற்சிந்தனைகள், சிறந்த வழிகாட்டுதல்கள் என எல்லாத் தலைமுறையினருக்கும் பயனுள்ள பொக்கிஷமாக ‘வெண்மை’ இதழை வெளியிடும் ராம்ராஜ் காட்டன் நிறுவனம், இன்றைய சமூகத்துப் பெரும் தொண்டாற்றி வருகிறது.

***– எஸ்.ஆவுடையப்பன், திருநெல்வேலி.***


# இந்தத் திசையில் பாருங்கள்!

மலைநகரம் ஒன்றில் இருக்கும் ஆலயத்துக்குத் திருவிழா நாட்களில் ஏராளமான கூட்டம் வரும். அந்த நேரத்தில் ஆலயப் பணிகளைச் செய்வதற்குப் பல ஆசிரமங்களிலிருந்தும் சந்நியாசிகள் வருவது வழக்கம். அப்படி இரண்டு சந்நியாசிகள் போய்விட்டுத் தங்கள் ஆசிரமத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

அந்தி நேரத்தில் அவர்கள் தங்கள் ஆசிரமத்தை நெருங்கினார்கள். நீண்ட தூரம் நடந்துவந்த களைப்பு அவர்களை வாட்டியது. “ஆசிரமத்துக்குப் போனதும் படுத்து நன்கு தூங்க வேண்டும்” என்றான் இளம் சந்நியாசி. அவனைவிட வயதில் சற்றுப் பெரியவன், “ஆமாம், நல்லவேளையாக வழியிலேயே சாப்பிட்டுவிட்டு வந்தோம்” என்றான்.

ஆனால், ஆசிரமத்தை அடைந்ததும் கண்ட காட்சி அவர்களை அதிர்ச்சி அடைய வைத்தது. சமீபத்தில் சூறைக்காற்றுடன் மழை பெய்திருந்ததால், ஆசிரமத்தின் மேற்கூரையில் பாதியளவு பிய்ந்து போயிருந்தது. அதிலிருந்த கீற்றுகள் தரையெங்கும் சிதறிக் கிடக்க, மீதியிருந்த கூரை மட்டும் அப்படியே இருந்தது.

இளம் சந்நியாசி இதைப் பார்த்ததும் ஆத்திரம் அடைந்தான். “என்ன கொடுமை இது! அநியாயம் செய்பவர்கள், பாவிகள் எல்லோரும் நன்றாக வாழ்கிறார்கள். நாம் நாள் முழுக்க இறைவனைத் துதிக்கிறோம். இறைவனுக்குச் சேவை செய்வதற்காகப் போய் வந்திருக்கிறோம். நம் ஆசிரமம் இப்படி அலங்கோலமாகக் கிடக்கிறது. கடவுள் இருக்கிறாரா என்று எனக்குச் சந்தேகம் வருகிறது” என்று கத்தினான்.



மூத்த சந்நியாசி எதுவும் பதில் சொல்லாமல் வானத்தை நோக்கிக் கைகளை உயர்த்தி வணங்கினான். “என்ன செய்கிறாய்?” என இளம் சந்நியாசி கேட்டான். “கடவுளை வணங்கி நன்றி சொல்கிறேன். இங்கே பயங்கரமாகக் காற்று வீசியிருக்கிறது. அதில் மொத்தக் கூரையும் பிய்ந்து போகாதபடி ஏதோ தடையை ஏற்படுத்தி, பாதிக் கூரையைக் கடவுள் காப்பாற்றியிருக்கிறார். நம் மீது கடவுள் கருணையுடன் இருக்கிறார்” என்றான் அவன்.

அந்த இரவு நேரத்தில் வேறு எதுவும் செய்ய முடியாது என்பதால், மிச்சமிருந்த கூரையின் அடியில் அவர்கள் படுத்தனர். “ஆஹா, கூரை இல்லாததால் வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களைப் பார்த்தபடி படுப்பது எவ்வளவு இனிமையான அனுபவம்” என்று சொன்னபடி மூத்த சந்நியாசி நிமிடங்களில் தூங்கிவிட்டான். இன்னொருவனோ, ‘திடீரென மழை வந்தால் என்ன செய்வது? மரத்திலிருந்து ஏதாவது விழுந்தால் என்ன ஆவது?’ என்றெல்லாம் யோசித்தபடி புரண்டு புரண்டு படுத்தான். அவனால் தூங்க முடியவில்லை.

மறுநாள் காலைவரை அவன் கண்சிவக்கப் படுத்திருக்க, காலையில் உற்சாகமாகப் பாட்டு பாடியபடி எழுந்தான் மூத்த சந்நியாசி. “ஏன் இப்படி பைத்தியம் மாதிரி நடந்துகொள்கிறாய்?” என்று அவனிடம் கத்தினான் இளைஞன்.

“இந்த மோசமான சூழ்நிலையிலும் நான் கடவுளுக்கு நன்றி சொன்னேன். எனக்கு மகிழ்ச்சி அதிகரித்தது, தூங்கிவிட்டேன். நீ கடவுளைத் திட்டினாய், உன் கோபம் அதிகரித்தது. நிம்மதி இழந்து, தூக்கத்தையும் இழந்தாய். உன் கோபமும் குறையவில்லை, என் மகிழ்ச்சியும் குறையவில்லை.

எந்தச் சூழ்நிலையிலும், நமக்கு மகிழ்ச்சி தரும் விஷயம் எதுவோ அதைப் பார்! அதுவே சரியான இடம். தவறான இடத்தைப் பார்த்தால், துன்பமே மிஞ்சும். வாழ்க்கை வரமாக மாறுவதும், துன்பமாக ஆவதும் நம் கையில்தான் இருக்கிறது” என்றான் மூத்த சந்நியாசி. இளைஞன் உண்மை உணர்ந்து அமைதியானான். ●




# வாழ்க்கை முழுக்க வரும் குரு!

ஒரு குருவின் போதனைகளை ஒருவர் வாழ்வில் பின்பற்றக்கூடும். அதே சமயத்தில் ஒருவருக்கு ஒரே ஒரு குரு அல்லது வழிகாட்டி மட்டுமே இருப்பதில்லை. வாழ்வின் எந்த ஒரு கட்டத்திலும் பாடங்களைக் கற்றுத் தரும் அத்தனை பேரும், நல்வழிகாட்டும் மனிதர்கள் அனைவரும் குருக்கள்தான். அவர்கள் எங்கோ தொலைதூரத்தில் இருப்பதில்லை. நமக்கு அருகிலேயேதான் இருப்பார்கள். உறவினர், நண்பர், அக்கம்பக்கத்தில் வசிப்பவர், அலுவலகத்தில் பணிபுரியும் மூத்த ஊழியர், நாம் தொழில் செய்யும் அதே வட்டாரத்தில் தொழில் செய்பவர் என்று வெவ்வேறு வடிவங்களில் அவர்கள் இருப்பார்கள்.

- ஒரு கேமராவின் லென்ஸ் மீது இருக்கும் மூடியைக் கழற்றாமல் புகைப்படங்கள் எடுத்தால், அவை எந்தக் காட்சியையும் வெளிப்படுத்தாது. இலக்கு இல்லாத பயணமும் அப்படிப்பட்டதுதான். வழிகாட்டிகளே நம் இலக்குகளை உணர்த்துகிறார்கள், நாம் செல்ல வேண்டிய பாதையைக் காட்டுகிறார்கள். ஒருவர் ஒவ்வொரு நாளிலும் கேள்விப்படும் புதுத் தகவல்களால் ஆச்சர்யமாகி அந்த எல்லாத் திசைகளிலும் ஓடினால் அவரால் உயர முடியாது. இன்று தங்கம் விலை குறைந்தால் நகைக்கடை வைக்க ஆசைப்படும் ஒருவர், நாளை 'சர்க்கரை வியாபாரத்தில் அதிக லாபம்' என்று கேள்விப்பட்டு அந்த வியாபாரத்தில் குதிக்க நினைப்பார். ஒவ்வொரு நாளும் மாறும் மனம், அவரை எதையுமே செய்ய வைக்காது. எவருக்கும் நிலையான இலக்கு வேண்டும்.

- ஒரு வேலை, தொழில் அல்லது வியாபாரத்தின் நெளிவு சுளிவுகளைக் கற்றுக்கொள்ள வழிகாட்டிகளே உதவுவார்கள். அவர்கள் தங்கள் வாழ்வில் சந்தித்த பிரச்னைகளை விவரிப்பார்கள். அந்தப் பிரச்னைகளுக்கு எப்படித் தீர்வு தேடினோம் எனச் சொல்வார்கள். அந்த எல்லாமே ஒருவருக்கு அவர் சந்திக்கும் பிரச்னைகளின்போது தீர்வு தேடுவதற்கு உதவும். அந்த வழிகாட்டுதல் இல்லாவிட்டால், சிக்கலான உடல்நலப் பிரச்னைக்கு எஞ்சினியர் ஒருவரிடம் போய்த் தீர்வு கேட்பது போன்ற அபத்தமான முடிவுகளை வாழ்வில் பலர் எடுக்கக்கூடும்.

- எப்போதும் தேர்வில் 80 மார்க் எடுக்கும் ஒரு மாணவன், 'நாம் நன்றாகப் படிக்கிறோம்' என்று நிறைவடைந்துவிட்டால், அவனால் 100 மார்க் எடுக்கும் இடத்துக்குப் போகவே முடியாது. நல்லாசிரியர் ஒருவரே அவனை நெறிப்படுத்தி, எப்படிப் படிக்க வேண்டும் என வழிகாட்டுவார். வேலை, தொழில், வியாபாரம் என்று எதிலும் பலர் இப்படித்தான் ஒரு பாதுகாப்பான வரம்புக்குள் நிறைவடைந்து தேங்கி விடுகிறார்கள். மனநிறைவு என்பது வேறு, நம் திறமையை உணராமல் 'இருப்பதே போதும்' எனத் தேங்கிவிடுவது வேறு! நல் வழிகாட்டியே இந்த வித்தியாசத்தைப் புரியவைத்து ஒருவரை முன்னேறிச் செல்ல வைப்பார்.


- நமது சின்னச்சின்ன சாதனைகளை ஒருவர் பாராட்டி ஊக்கப்படுத்துவது வேறு. அதே சமயத்தில், பள்ளி அளவிலான ஓட்டப்பந்தயத்தில் ஜெயிக்கும் ஒருவரை, உலகப் புகழ்பெற்ற உசைன் போல்டுடன் ஒப்பிட்டுப் பாராட்டுவது சரியல்ல! நம்மை நேசிக்கும் பலர், இப்படிப்பட்ட தவறைச் செய்கிறார்கள். ஆனால், நல்ல வழிகாட்டிகள் இப்படிச் செய்வதில்லை. நம்மைப் பாராட்டிவிட்டு, 'இது சின்ன சாதனைதான். இன்னும் போக வேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கிறது' என்று புரிய வைப்பார்கள்.

## உங்களைப் போல ஒருவர்!



உங்களுக்கு வழிகாட்டும் ஒரு குரு எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்? தொழில், வியாபாரம் அல்லது வேலை சார்ந்த வழிகாட்டல் என்றால், உங்களைப் போன்ற ஒருவரையே தேர்வு செய்ய வேண்டும். உங்கள் துறையில் இருப்பவர், உங்களைவிடத் திறமைசாலியாக இருப்பவர், உங்களைவிட அனுபவசாலியாக இருப்பவரே உங்கள் வழிகாட்டியாக அமைய வேண்டும்.

அப்படி நீங்கள் மதிக்கும் ஒருவரிடம் திடீரெனச் சென்று, "நீங்கள்தான் என் குரு, எனக்கு வழிகாட்டுங்கள்" என்று கேட்பது சரியாக இருக்காது. அவரைப் பற்றி நன்கு அறிந்துகொண்டு, அவரிடம் சென்று அறிமுகம் ஏற்படுத்திக்கொண்டு, அவரின் அனுபவங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அதன்பின் வழிகாட்டல் கேட்கலாம். அப்போது, நீங்கள் கேட்பதெல்லாம் கிடைக்கும்.



## நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்!

கண்ணீருடன் ஒரு துறவியிடம் வந்தார் ஒரு பெண். "என் கணவரிடம் நிறைய குறைகள் இருக்கின்றன. என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவரோடு இனி என்னால் வாழமுடியாது. நான் அவரைவிட்டு விலகி விடட்டுமா?" என்று கேட்டார். துறவி அவருக்கு ஆசிரமத்திலிருந்து, அடர்மஞ்சள் வண்ணத்தில் பூ பூக்கும் ஒரு ரோஜா செடியைக் கொடுத்தார். "ரோஜா பிடிக்குமா?" என்று கேட்டார். "எனக்கு ரோஜாப்பூ என்றால் கொள்ளை ஆசை. இந்த நிறம் என்றால் இன்னும் பிடிக்கும்" என்றார் அந்தப் பெண்.

"ஆனால் ரோஜா செடியைப் பராமரிப்பது மிகவும் கடினம். நிறைய முட்கள் வேறு இருக்கின்றன" என்றார் துறவி. "எனக்குப் பூக்கள் பிடிக்கும் என்பதால், முட்களைப் பொருட்படுத்த மாட்டேன்" என்றார் அந்தப் பெண். புன்னகைத்த துறவி, "வாழ்க்கையும் அப்படித்தான்! பிறரை நேசிக்கக் கற்றுக்கொண்டால், அவர்களது குறைகள் பெரிதாகத் தெரியாது" என்றார். அந்தப்பெண் புரிந்துகொண்டார்.



## ஞானம் பெறுங்கள்!

சமையலுக்குப் பயன்படுத்தினாலும், 'தக்காளி என்பது காய்கறி அல்ல, அது பழம்' என அறிந்திருப்பது அறிவு. ஆனால், பழங்களைக் கலந்து செய்யும் ஃப்ரூட் சாலடில் தக்காளியைப் போடாமல் தவிர்ப்பதற்கு உதவுவது ஞானம்.

ஒருவர் கராத்தே பயிற்சிக்குப் போனார். கராத்தே மாஸ்டர் அடுத்த சில மாதங்கள் அவருக்கு விதவிதமான பயிற்சிகளை அளித்தார். அவரும் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்தார். இப்போது கராத்தே பற்றிய அறிவு அவருக்குக் கிடைத்துவிட்டது. கடைசியாக அவர் கராத்தே கலையில் முழுமை பெற்று பிளாக் பெல்ட் வாங்கும்போது அவரது மாஸ்டர் ஓர் அறிவுரை சொன்னார். "கராத்தே என்பது தற்காப்புக் கலை. இதை ஆபத்து நேரத்தில் பாதுகாப்புக்குப் பயன்படுத்த வேண்டுமே தவிர, அடாவடியாக அடுத்தவர்களிடம் வம்புச்சண்டைக்குப் போகக்கூடாது!" வாழ்நாள் முழுக்க இதை அவர் பின்பற்றினார். இது ஞானம்.


'எது சரி, எது தவறு' என்று பிரித்துப் பார்த்து அறியும் ஞானத்தை சிறந்த வழிகாட்டிகளிடம் பெறுங்கள்.

## இப்படி வழிகாட்டக்கூடாது!

ஒரு மரத்தில் கூடுகட்டி வசித்துவந்தது குருவி. குளிர் நடுக்கும் ஓர் இரவு நேரத்தில் அந்த மரக்கிளையில் வந்து அமர்ந்தது ஒரு குரங்கு. குளிர் தாங்காமல் அதன் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. குருவி உடனே கூட்டிலிருந்து எட்டிப் பார்த்து, "இந்தக் குளிரில் நீ இங்கே என்ன செய்கிறாய்? உனக்கு வீடு இல்லையா?" என்று குரங்கிடம் கேட்டது. குளிர் நடுக்கியதால் எரிச்சலில் இருந்த குரங்கு எதுவும் பதில் சொல்லவில்லை.

குருவி சும்மா இருக்காமல், "நீ அமைதியாக இருப்பதைப் பார்த்தால், உனக்குத் தங்குமிடம் எதுவும் இல்லை போலிருக்கிறது. நீ நன்றாகத்தானே இருக்கிறாய்? ஏன் உனக்கு ஒரு வசிப்பிடம் உருவாக்கிக்கொள்ளவில்லை. இப்போது என்னைப் பார்! நான் கூடு கட்டியதால்தான், இந்தக் குளிரில் நிம்மதியாக அதற்குள் இருக்கிறேன்" என்று அறிவுரை சொன்னது. இதைக் கேட்டதும் குரங்கு கோபமாக வந்து குருவியின் கூட்டைப் பிய்த்துப் போட்டது.

கேட்காதவர்களுக்கு வழிகாட்டக்கூடாது என்ற கசப்பான உண்மையைக் குருவி புரிந்துகொண்டது.





## இதுவே வாழ்க்கைப்பாடம்!

ஒரு முதியவரிடம் சென்றான் ஓர் இளைஞன். "நான் வெளியூருக்கு வேலைக்குப் போகிறேன். எனக்கு வாழ்க்கை முழுக்கப் பயன்படுகிற மாதிரி ஒரு பாடத்தைச் சொல்லிக்கொடுங்கள்" என்று கேட்டான். முதியவரோ, "நான் இப்போது பேசும் மனநிலையில் இல்லை. மிகவும் கவலையாக இருக்கிறேன். எனது கருவுற்ற பசு பிரசவ வலியில் துடிக்கிறது. கன்று இன்னும் பிறக்காமல் இருக்கிறது. அது உயிர் பிழைக்க என்ன செய்வது என்று தெரியவில்லை. நீ போய் யாராவது நான்கு பேரிடம் யோசனை கேட்டு வா!" என்று பரபரப்பாகச் சொன்னார்.

இளைஞன் ஓடினான். பிறகு ஒரு மணி நேரம் கழித்து வந்தான். "நான்கு பேரிடம் கேட்டேன். ஒருவர் உடனே கால்நடை மருத்துவரை அழைத்து அறுவை சிகிச்சை செய்து கன்றுக்குட்டியை வெளியில் எடுக்கலாம் என்றார். இரண்டாம் நபர், 'அதெல்லாம் தேவையில்லை. பசு கன்றை ஈன்றுவிடும்' என்றார். மூன்றாம் நபரோ, பசு பிழைப்பது கஷ்டம் என்றார். நான்காவது நபரோ, உங்கள் கைகளால் கன்றுக்குட்டியை இழுத்துப் பிரசவிக்க உதவச் சொல்கிறார்."

"நான்கு பேரும் நான்குவிதமாகச் சொல்கிறார்கள். நான் என்ன செய்ய வேண்டும்?" என்று முதியவர் கேட்க, "எனக்கும் குழப்பமாக இருக்கிறது" என்றான் இளைஞன்.

முதியவர் சிரித்தார். பிறகு இளைஞனின் தோளைத் தட்டிவிட்டு, "என்னிடம் பசுவும் இல்லை, அது பிரசவ வேதனையில் துடிக்கவும் இல்லை. உனக்கு ஒரு சின்ன சோதனை வைத்து வாழ்க்கைப்பாடத்தைக் கற்றுக்கொடுக்க நினைத்தேன். அதனால்தான் இப்படிச் செய்தேன். ஒவ்வொரு விஷயத்திலும் பலருக்கு வெவ்வேறு கருத்துகள் இருக்கும். எல்லாவற்றையும் நாம் பின்பற்ற முடியாது. நம் அறிவுக்கு எது சரி என்று படுகிறதோ, அதைச் செய்தால் போதும். முரண்பட்ட கருத்துச் சொல்பவர்களிடம் சண்டைக்குப் போகவும் கூடாது. இதுதான் இனிய வாழ்வுக்கு உதவும்" என்றார். இளைஞன் வணங்கி விடைபெற்றான்.

# சுமையா... மகிழ்ச்சியா?



நாடோடித் துறவி ஒருவர் இருந்தார். எந்த ஊருக்குப் போனாலும் அவர் யாசகம் செய்து உண்பார். பணம் வாங்க மாட்டார், தன் பசிக்கு உணவு மட்டுமே பெறுவார். அதைத் தவிர பொம்மைகள், இனிப்புகள் கொடுத்தால் வாங்குவார். அவற்றைத் தன் மூட்டையில் பத்திரமாக வைத்திருந்து, தேவைப்படும் குழந்தைகளுக்குக் கொடுப்பார். பலரும் அவருக்குப் பொம்மைகள் கொடுப்பதால், அவரது பை எப்போதும் பெரிதாக இருக்கும்.

ஒருநாள் இளைஞர்கள் சிலர் அவரிடம், “குழந்தைகளுக்கு மட்டுமே பொம்மையும் இனிப்புகளும் தருகிறீர்களே? எங்களுக்கும் ஏதாவது கொடுங்கள். உங்களின் பெரிய பையில் எங்களுக்கும் ஏதாவது இருக்குமே” என்றனர்.

துறவி சிரித்தபடி தன் முதுகில் மாட்டியிருந்த பெரிய பையைக் கீழே எடுத்து வைத்தார். “இதுதான் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது. என்னால் உங்களுக்குக் கொடுக்க முடிந்த மிகப்பெரிய வழிகாட்டுதலைக் கொடுத்துவிட்டேன்” என்றார் துறவி. இளைஞர்கள் குழம்பிப் போய், “எங்களுக்கு எதுவும் புரியவில்லை” என்றனர்.

‘‘இந்தப் பெரிய பை எனக்கு மிகப்பெரிய சுமையாக இருந்தது. இப்போது இதைக் கீழே இறக்கி வைத்துவிட்டேன். இனி நான் சுமைகள் இல்லாமல் மகிழ்ச்சியாக இருப்பேன். உங்கள் மனதில் சுமந்துகொண்டிருக்கும் தேவையற்ற கவலைகளையும் குழப்பங்களையும் தூக்கிப் போட்டுவிட்டால், நீங்களும் மகிழ்ச்சியாக இருக்கலாம்” என்றார் துறவி.

“சரி, அடுத்து என்ன செய்வது?” என்று ஓர் இளைஞன் கேட்க, துறவி மீண்டும் அந்த மூட்டையை எடுத்து தன் முதுகில் மாட்டிக்கொண்டார். “தூக்கிப் போட்ட மூட்டையை ஏன் திரும்பவும் சுமக்கிறீர்கள்?” என்று அவன் மீண்டும் கேட்டான். “நான் சுமையைத் தூக்கிச் சுமக்கவில்லை. இதில் பொம்மைகளும் இனிப்புகளும் இருக்கின்றன. இவற்றைக் கொடுப்பதன் மூலம் நான் குழந்தைகளிடம் சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்வேன். எனவே, நான் மகிழ்ச்சியை மட்டுமே சுமந்து செல்கிறேன். மனதில் எதைச் சுமக்கிறோம் என்ற தெளிவு உங்களுக்கு வேண்டும்” என்றார் துறவி.

வாழ்க்கையில் ஒரு நல்ல வழிகாட்டி கிடைத்தால் உங்களுக்கு நிறைய பலன்கள் உண்டு.

- மாறும் சூழல்களுக்கு ஏற்றபடி உங்களைப் பொருத்தமாக மாற்றிக்கொள்வது எப்படி என்று வழிகாட்டிகள் உணர்த்துவார்கள்.
- எப்படிப்பட்ட சூழலிலும் உங்களுக்குப் பின்னால் நின்று ஊக்கம் தந்து நன்கு இயக்கியபடி இருப்பார்கள்.
- உங்கள் வேலை, தொழில், வியாபாரம் ஆகியவற்றால் கிடைக்கும் அடையாளத்தைத் தாண்டிய ஒரு சிறந்த அடையாளத்தைப் பெற்றுத் தருவார்கள்.
- பணம், புகழ், திறமை என்று எல்லாவற்றிலும் உயர்ந்து சிறந்த மனிதராக நீங்கள் மாறுவதற்கு உதவுவார்கள்.
- எதையும் நீங்கள் சரியான வழியில் புரிந்துகொள்வதற்கு வழிகாட்டுவார்கள்.
- உங்களின் முயற்சிகளில் அடையும் வெற்றிகளைப் பாராட்டி, உங்களை இன்னும் பல வெற்றிகளை நோக்கிச் செல்ல வைப்பார்கள்.
- உங்களுக்குச் சிறந்த நண்பராக இருந்து தட்டிக்கொடுக்கவும் செய்வார்கள், ஆரோக்கியமான விமர்சகராகவும் இருந்து உங்களை நெறிப்படுத்திச் சரியான பாதையில் வழிநடத்தவும் செய்வார்கள்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


RAMRAJ
mrithu®
TOWELS
SOFT LIKE
Foam
MRITHU PREMIUM
BATH TOWELS
STORE LOCATION
Shop Online at
www.ramrajcotton.in
BAMBOO TOWELS
SIGNATURE TOWELS
TERRY TOWELS
STRIPED & CHECKERED TOWELS
SUPER SOFT & SUPER ABSORBENT
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-08-2025. Posted at Tirupur BPC on 5th of every month.

